

# திருக்கோயில்

ஜூன் 1993 விலை ரூ. 3





மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்ற மீனாட்சித் திருக்கல்யாண வைபவத்தில் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திருமிகு சேடப்பட்டி முத்தையா அவர்கள் தம் துணைவியாருடன் வந்து கலந்து கொண்டார்கள். அறநிலையத்துறை ஆணையாளர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப. அவர்கள் மற்றும் இணை ஆணையாளரும் நிர்வாக அதிகாரியுமான திரு வே. முனியசாமி எம் ஏ.பி.எல்., அவர்கள் உடன் உள்ளார்கள்.



முகப்பு:
கோவை அருள்மிகு கோனி மாரியம்மன்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 8279407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

மாலை: 35 | திருவள்ளுவர் ஆண்டு 2024 ஸ்ரீமுக ஆண்டு ஆனி ஜூன் 1993 விலை ரூ. 3-00 | மணி: 6

திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர் களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

உயர்திரு ஆணையர் அவர்கள்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

## பொருளடக்கம்

அருளாளர்களின் அருள் அனுபவம்
— திருமந்திரச் செம்மல் டி.வி. வெங்கட்ராமன், ஐ.ஏ.எஸ்.,

நம்நாட்டுச் சித்தர்கள்
— டாக்டர் இரா. மாணிக்கவாசகம்

நமது சமய முறைகளில் அறிவியல் கருத்துக்கள்
— பேராசிரியர் டாக்டர் ஜே.ஜி. கண்ணப்பன்

திரு அம்பர் மாகாளம்
— பொன் கண்ணபுரம் சுப்பிரமணியம்

அர்ச்சகர்களுக்கு ஓய்வூதியம் சுற்றறிக்கை

கந்தவேள் கருணை
— டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

கீதைக்குறள்கள்
— அறநெறியண்ணல் கி. பழனியப்பனார்

ஏரகப் பொருப்பிற் பூத்த பெருமாள்
— தி. இராசமாணிக்கம்

அரையர் சேவை ஓய்வூதியம்— சுற்றறிக்கை

மழைபொழிவிக்கும் வள்ளல் திருப்பதிகங்கள்

ஒரு கால பூஜைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களின் உதவி

இல்லையே என்னாத இயற்பகைக் கடியேன்
— பேராசிரியை சுமதி குமாரசாமி

ஆடல்காணீரோ, திருவிளையாடல் காணீரோ
— கம்பன் கவிநயமணி வே. தியாகராசன்



# அருளாளர்களின் அருள் அனுபவம்

திருமந்திரச்செம்மல்

**டி.வி.வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ்**

*திருமிகு தலைமைச் செயலாளர் அவர்கள்*



(23)

சைவ சமயத்தில் ஊன்றி நிற்கும் பெருமக்களின் உள்ளங்களிலே தலையாய இடத்தை பெற்றுள்ளது சேக்கிழார் பெருமான் அருளச் செய்த திருத்தொண்டர் புராணம். இது ஓர் தனித்தமிழ் நூல். வேதங்களோடு ஒப்ப தமிழ் வேதமாக போற்றப்படும் நூல். இறைவனே ''உலகெலாம்'' என்று அடியெடுத்துக் கொடுக்க எல்லையற்ற திருவருள் சேக்கிழார் பெருமானின் புனித உள்ளத்தை தெய்வீகமாக்கி பூவுலகில் வாழும் மக்களுடைய வாழ்க்கை உய்வடைய அந்த உள்ளத்திலே தோன்றியதே திருத்தொண்டர் புராணம் ஆகும். திருத்தொண்டர் புராணம் உண்மையிலேயே இறைநூலாகும். ''ஓதும் பொதுவும் சிறப்பும் என்றுள''. பெரிய புராணத்தின் பெருமை மிக மிகப் பெரிது. அது வெறும் வரலாற்றுக் கோர்வை மட்டுமல்ல. ஓர் சிறந்த தெய்வீகக் காப்பியமாகும். திருச்சிற்றம்பலத்தில் சேக்கிழார் பெருமான் தன் நிலை மறந்து சிவப் பிழம்பாக, அப்பாலுக்கு அப்பாலாக விளங்கும் மாபெரும் உண்மையோடு ஒன்றுபட்டு, அதில் தோய்ந்து, உருகி, கரைந்து அந்த உண்மை வடிவமேயாகி, அந்த உண்மையைக் காப்பியமாகப் பாடினார் என்று சொல்லுதல் மிக்க பொருத்தமாக அமையும். திருத்தொண்டர் புராணம் சமய இலக்கியத்திற்கு அப்பாற்பட்டது. சமய இலக்கியத்திற்கும் மேலானது. என்னைப் பொருத்தவரை சேக்கிழார் பெருமானுடைய படைப்பு ஆன்மிகத்தின் திறவுகோலாக எனது மனக்கண்கள் முன் நிற்கும் பாங்கினை முழுமையாக அனுபவித்துள்ளேன். சமய, சாத்திர நூல்களை முறையாக கற்க வேண்டும் என்கிற ஆர்வத்தை நான் பெற்றிராத போது 'திருத்தொண்டர் புராணத்தைப் புரட்டிப்பார் என்று நல்ல உள்ளம் படைத்த சில பெரியோர்கள் எனக்கு அறிவுரை வழங்க அந்த மாபெரும் நூலை நான் படிக்க முற்பட்டு அதில் ஆழ்ந்து போய், பெருமைமிக்க சிவனடியார்கள் ஒவ்வொருவராக என்னுடைய இதய மேடையிலே உவகையோடு நடைபோட்டுச் சென்ற காட்சியை, அதில் நான் கண்ட தெய்வீகத்தை, ஆன்மிகத்தை, அன்பின் மேன்மையை, தொண்டின்பண்பாட்டினை எவ்வாறு விளக்குவது என்று தெரியாமல் நிற்கின்றேன். பேரறிஞர்கள் திருத்தொண்டர் புராணத்தை பல கோணங்களிலிருந்து ஆய்வுசெய்துள்ளனர், போற்றி உள்ளனர். அந்த ஆய்வுகளை நாமும் கற்று அனுபவிக்கலாம். ஆனால், திருத்தொண்டர் புராணத்தை அனுபவித்து வரும் ஒருவருடைய உள்ளம் அந்த ஆய்வுகளுக்கு அப்பாற்பட்டுள்ள ஒரு உண்மையையே நாடிச் செல்லுகின்றது. சென்று உணர்கிறது. உணர்ந்து இன்பத்திலே திளைக்கின்றது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். முடிவாக நமது உள்ளங்களிலே தனித்து நிற்கும் உணர்வு பற்றற்றவர்களாகிய அடியார்கள் பற்றி நிற்கும் பரம்பொருளானது உண்மையில் உயிரோடு நெருக்கமாக நிற்கிறது. உயிருக்கும் அதற்கும் உள்ள இடைவெளி மிகவும் குறைவு. அந்த இடைவெளியை எளிதாக நீக்கிக் கொள்ளலாம். அன்பும் தொண்டும் எனப்படும் இரண்டு மனிதகுணங்களே அதற்கு ஏதுவாகும், அவற்றை நீக்கி வேறொன்றினால் பரம்



பொருளை அடைய முற்படலாகாது என்பது தான்.

உலகில் தோன்றிய ஒவ்வொரு மனிதனும் என்றாவது ஒரு நாள் தன்னைப் பற்றி சிந்திக்கத் தொடங்குகின்றான். அந்த சிந்தனையின் முடிவில் அவன் ஓர் உண்மையை அடைந்தாக வேண்டும். எல்லாவற்றிற்கும் காரணமாக ஒருவன் இருத்தல் வேண்டும் என்பதே அந்த உண்மையாக இருக்கும். அந்த உண்மை அவனுடைய உள்ளத்தில் புலப்பட்டவுடன் அந்தக் காரணன் யார், அவனுக்கும் தனக்கும் உள்ள உறவு யாது போன்றவற்றை அறிந்து கொள்வதே கடமை என்றும் கருதிக் கொள்வதில் தவறில்லை. இவ்வாறு ஆராய்ச்சி செய்து முடிவில் பேரண்டங்களையெல்லாம் படைத்து நிற்கும் ஒருவனுடைய திருவடிகளை வணங்குவதே தனக்கேற்ற பணி என்றும் மனிதன் முடிவுக்கு வருகின்றான். அந்த நிலையில் தன்னுடைய வாழ்க்கையை எவ்வாறு அமைத்துக் கொள்ள வேண்டும், பிறருடனும், சமுதாயத்துடனும் எந்த முறையில் பழக வேண்டும் எதற்காக நமக்குத் தரப்பட்ட வாழ்க்கையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் போன்ற வினாக்கள் மீது முடிவான பதிலையும் பெற்று, இன்பமும் அமைதியும் கலந்த ஒரு முழுமையான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதே இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவனுக்கும் ஏற்ற நோக்கமாக அமைய வேண்டும்.

இவற்றிற்கெல்லாம் தகுந்த முடிவினை நமக்கு திருத்தொண்டர் புராணம் தெள்ளத் தெளிவாக எடுத்துத் தருகின்றது என்கிற காரணத்தினால் அது ஒப்பற்ற ஒரு வாழ்ச்கை நூலாகவும் அமைகின்றது. இந்த முடிவிற்கு நாம் வேறு எங்கும் போக வேண்டியதில்லை அடியார்களுடைய வாழ்க்கையில், பண்புகளில், நெறிகளல் இந்த முடிவினைப் பார்க்கலாம்

அடியார்கள் செய்தற்கரிய செய்கைபுரிந்த பெரியார் ஆவர். உயிர்கள் எல்லாவற்றாலும் உணர்வதற்கும், ஓதுதற்கும் அரியவனான தன்னிகரற்ற சிவபெருமானுடைய மலர்ச் சிலம்படிகளிலே தங்களை என்றும் கிடத்திக் கொண்டவர்கள். . ஊன் பொருந்திய தேகத்தை எடுத்த மானுடப் பிறவி தில்லையிலே பெரும் கூத்தைப் புரிகின்ற இறைவனுடைய பொற்பாதங்களை வணங்கி நிற்பதே தங்கள் வாழ்க்கையின் உறுதிப் பொருள் என்கிற கோட்பாட்டை கொண்டவர்கள் சிவனடியார்கள். அவர்கள் அளவற்ற பெருமையுடையவர்கள். அனைவருமே சிவஞானச் செல்வர்கள் சிவானுபவம் முழுமையும் பெற்றவர்கள். அவர்கள் பலதரப்பட்டவர்களாக இருக்கலாம். பல சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். பொருளாதாரத் துறையில்ஏற்ற தாழ்வுடையவர்களாக இருக்கலாம். ஆனால், அனைத்துப் பெயர்களுமே ஒரே அடியார் திருக்கூட்டத்தை சேர்ந்தவர்கள். சிவபெருமானை முழுமுதற் பொருளாக ஏற்றுக் கொண்டு தன்னலத்தை

அடியோடு துறந்து, பிறர்பொருட்டு வாழ்ந்து, இறைவனுக்கும், அனைவருக்கும் தொண்டு செய்தலே தனது பணி என்று, அச்சம் முதலிய வற்றை வாழ்விலிருந்து அறவே அகற்றி, தம் முடைய குறிக்கொளுக்காக உயிரையும் விட சித்தம் கொண்டவர்கள் என்கிற அடிப்படை யில் சேக்கிழார் பெருமான் நாயன்மார்களை புகழ்மிக்க அடியார் கூட்டத்தில் வைத்து போற்றிச் செய்கின்றார்.

மேலும் சிறப்பியலாக சேக்கிழார் பெரு மான் அடியவர்களுடைய குணாதிசயங்களை யும் கோடிட்டுக் காண்பிக்கின்றார். துன்பம் நேரிடும்பொழுது இறைவனைத்தான் அணுக வேண்டும் என்பதில்லை. அடியார்களை அடைந்து வழிபட்டாலே போதும். தம்மை அடைந்து வழிபடுபவர்களுடைய துன்பங்களை நீக்கும் ஆற்றல் பெற்றவர்கள் அடியார்கள். முழுத் தூய்மை பெற்றவர்கள். இந்தத் தூய் மையாவது அகத் தூய்மையாகும். அகத் தூய் மையோடு அன்பினால் உந்தப்பட்டவர்கள். இறைவன் மீது வைக்கும் அன்பு மட்டுமின்றி சகல ஜீவராசிகள் மீதும் முழுமையான அன்பு செலுத்தும் உள்ளம் படைத்தவர்கள். அந்த அன்பின் காரணமாக பிறருக்கு வாழ்நாட்கள் முழுவதும் தொண்டு செய்யும் கடப்பாடு உடை யவர்கள். தங்கள் மனதை, உட்கருவிகளை, புறக்கருவிகளை சிவன்பால் முழுமையாக வைத்ததன் காரணமாக எந்தச்சூழ்நிலையிலும் தங்கள் நிலை கலங்காது. அன்பு வழி பிறழாது, குற்றமற்ற குணமலை போல நிற்ப வர்கள் அடியார் பெருமக்கள். எல்லாவற்றை யும் துறந்தவர்கள். தங்களுக்கு என ஒன்றும் இல்லாதவர்கள். தமது உடல், ஆவி, உடைமை பூவுலகம், படைக்கப்பட்ட பேரண்டம் இவை யெல்லாம் இறைவனுடைய உடைமை என்று கருதுபவர்கள், **மண்ணோட்டையும் பசும் பொன்னையும் ஒன்றுபோல் காண்பவர்கள்.** அந்த நிலையிலே அவர்கள் குறைவில்லாத ஐஸ்வர்யத்தைப் பெற்றவர்கள். திருவருளைத் தங்களிடம் கொண்டமையால் எல்லாவற்றை யும் தமதாக்கிக் கொண்டவர்கள். அவர்கள் பிறரிடமிருந்து யாசிப்பது ஒன்றுமில்லை. ஆனால் பிறரோ அவர்களிடமிருந்து பெறு வதற்கு நிறைய உண்டு. அதுவே அன்பாகும். ஜீவராசிகள்பால் அன்பு செலுத்தி, அந்த அன் பினில் இறைவனைக் காணும் வல்லமை பெற்றவர்கள் அடியார்கள். அன்பெனும் போர்வையை போற்றிக் கொண்டவர்கள் உடலிலே கந்தை உடுப்பதில் விந்தையில்லை. கொடுக்க கொடுக்க வற்றாத அன்பினைக் கொண்டவர்கள் ஆதலால், ஒன்றினாலும் குறைவு இல்லாதவர்கள். இத்தகைய பெரி யார்கள் தங்கள் கொள்கைகளுக்கும், குறிக் கொள்களுக்கும் மாறாக எதுவரினும் அஞ்சாது எதிர்த்து நின்று வெற்றி பெறும் மனோ பாவத்தை உடையவர்கள். தன்னலத்தின் அடிப்படையில் வருவது தற்காப்பு உணர்ச்சி. அத்துடன் சேர்ந்து நிற்பது அச்சம். தொண்டர் பெருமக்களோ ஈசன் அருளில் ஊன்றி நின்று தொண்டையும், அன்பையும் பேராயுதங்களாக கொண்டு வாய்மையே வசமாகப் பெற்று வீர வரலாற்றுச் சாதனை படைத்தவர்கள், சேக் கிழார் பெருமான் அவர்களுடைய பண்புகளைப் பின்வருமாறு எடுத்துரைக்கின்றார்.

'அரந்தை தீர்க்கும் அடியவர்'
'அகில காரணர்தாள் பணிவார்கள்; தாம்


அகில லோகமும் ஆளற்கு உரியர்'
'கைத்திருத் தொண்டு செய் கடப்பாட்டினார்'
'பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும்
மா தொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்''

'ஓது காதல் உறைப்பின் நெறி நின்றார்
கோதிலாத குணப் பெருங் குன்றனார்'

அடியார்களின் உள்ளம் சிவத்தின்பால் பதிந்தே கிடக்கும். அவர்களுடைய நெஞ்சம் சிவத்தின் திருவடிகளிலேயே தஞ்சமாகக் கிடக் கும். புற வாழ்க்கையில் அவர்கள் பல பணி களை மேற்கொண்டாலும் இறைவனுக்குத் தொண்டு செய்து கிடப்பதே தமது கடமை என்று கொண்டவர்கள். சில வேளைகளில் அடியார்களுடைய செய்கைகள் நமக்கு வியப் பைத் தரலாம். ஆனால், அவர்களுடைய செய் கைகளுக்கு விளக்கம் உண்டு. அரிவாட்ட நாய னாருக்கு சிவபெருமான் கூறியது. 'நன்று நீ புரிந்த செய்கை'' மூர்த்தி நாயனார் செயலை சிவபெருமான் 'அன்பின் துணிவால் செய்த செயல்' என்கிறார். கண்ணப்பனாரின் அன்பு நிலையை அறியாதவர் ஒருவரும் இல்லை. 'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்ட பின்' என்பார் மாணிக்கவாசகர்.

அதே நேரத்தில் தொண்டின் இன்றியமை யாமைக்கு எடுத்துக்காட்டாக அடியார்கள் விளங்குகின்றார்கள். இறை உணர்வு முழுதும் உடையவர்கள் ஆதலால் அடியார்கள் சமுதா யத்தில் உள்ள ஏற்ற தாழ்வுகளை பாராட்டுப் வது இல்லை. தொண்டு மனப்பான்மை இறை உணர்வின் அடிப்படையிலே தோன்றுகிறது. சமுதாயத்தில் ஈடுபடாமல் துறவிகள் போல் காடுகளில் இருந்துவிடாமல் பயனற்ற ஒரு வாழ்வினை மேற்கொள்ளுவதைவிட உயிர் களிடத்தில் அன்பு காட்டி அவர்களுடைய குறைகளைக் களைய தொண்டு நெறி மூலமாக தங்களை அர்ப்பணித்துக் கொள்வதையே மேலாகக் கருதுபவர்கள் அடியார்கள்.

அடியார்கள் சமயஅனுபவத்தில் திளைத் தவர்கள். நாயன்மார்கள்எல்லோருமே சைவ சமயத்தின் வழிமுறைகளை ஏற்று அவற்றின் படி நடப்பவர்கள். பின்னர் அவற்றிற்கு அப் பாற்பட்டஇறை அனுபவத்தைக் கண்டவர்கள். தூய மனம் தியான முறை, இறைவன் வழிபாடு ஐந்தெழுத்து ஓதுதல், திருக்கோயில்கள் தீர்த் தங்கள் ஆகியவற்றை சென்றடைதல், பொறி, புலன்களை அடக்கி ஆழ்நிலை தியானத்தில் அமர்ந்து, உள்ளத்தைவிட்டு, ஒரு அடி நீங்கா ஒருவனைக் கண்டு, வணங்கி, அதில் ஏற்பட்ட அனுபவத்தைப் பிறருக்கு வழங்கி இன்பம் அடைதல் ஆகியவற்றை இயல்பாகவே கொண் டவர்கள் அடியார்கள்.




***குன்றத்தூரில் நம் அறநிலையத்துறையின் சார்பில் நடைபெற்ற தெய்வச் சேக்கிழார் விழாவில் பெரிய புராணத்தில் விஞ்சி நிற்பது ஆண்டவர் பெருமையா? அடியவர் பெருமையா? எனும் தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. பேராசிரியர் தி. இராச கோபாலன் அவர்கள் நடுவர் பொறுப்பேற்ற இப்பட்டிமன்றத்தில் டாக்டர் த.அமிர்தலிங்கம், டாக்டர் சாரதா நம்பியாரூரன், திருமதி சாவித்திரி இராகவேந்திரா, டாக்டர் அரங்க இராமலிங்கம், பேராசிரியை பிரேமா குமார், புலவர் ம. இராமலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.***

அதே நேரத்தில் அவர்கள் தொண்டு நெறியில் நின்று பல்வேறு பணிகளை மக்கள் நலனுக்காக மேற்கொண்டார்கள் என்பதும் உண்மையாகும். வசதியற்றவர்களுக்கு உணவளித்தல், தண்ணீர்ப் பந்தல் நடத்துதல், உடலுக்குத் துணி போன்றவற்றைத் தருதல், குயவர் பணியில் ஈடுபட்டு பானைகள் போன்றவற்றைச் செய்து தருதல் போன்றவை அடியார்கள் மேற்கொண்ட தொண்டு நெறிக்கு எடுத்துக் காட்டாகும். பிறருக்கு ஏற்படும் இன்னல்களைக் களைவதும் அவர்கள் புரிந்த தொண்டாகும். எறிபத்த நாயனார் ஒரு உதாரணம். 'இறையவர்க்கு உரிமை பூண்டார்க்கு அரும்பெரும் தொண்டு செய்வார் அவர் எறிபத்தராவார், என்கிறார் சேக்கிழார் பெருமான். சிவனடியாருக்கு இழைக்கப்பட்ட குற்றத்தைப் போக்க வீறுகொண்டு எழுதுவதும் தொண்டு நெறியைச் சேர்ந்ததாகும் எனபது சேக்கிழார் பெருமான் நமக்குத் தரும் விளக்கம்.

பெரியபுராணத்தில் நம் கண் முன் நிற்பது இறை உணர்வாளர்களின் செயல்கள். வெளிப்படையாக நடக்கும் செயல்களுக்கு அடியார்களுடைய உள்ளம் எவ்வாறு அடிப்படையாக அமைகின்றது என்பது விளக்கப்படுகிறது. திருஞானசம்பந்தர். திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகியோர் மட்டுமே திருத்தொண்டர் புராணத்தில் மேலான நிலையைப் பெற்றுவிடவில்லை. அவர்களுக்கென்று சிறப்பான இடம் உண்டு என்பதில் ஐயமில்லை. எனினும், பாமர மக்களாகிய நமக்கு நம்மைப் போன்ற பாமர மக்கள் திருவருள் பெற்று, இறை உணர்விலே நின்று, செயற்கரிய செயல்கள் புரிவதை நாம் காணும்பொழுது நமக்கு ஒரு சிறப்பான ஊக்கம் கிடைக்கிறது. இறைவனை அடைய முயல்வதில் தவறு ஒன்றுமில்லை. பூமியில் பிறந்த ஒவ்வொருவரும் இறைவனை அடைய முற்படுவது இயல்பாகவே அமையலாம். இந்த முடிவினை நமக்கு எடுத்துக் கூறுவது திருத்தொண்டர் புராணமாகும்.

''சிவனடியார்களின் பெருமைகளை ஒரு பெரும் காப்பியமாக உருவாக்கித் தர வேண்டும்;'' என்று சேக்கிழார் பெருமானை அநபாயச் சோழன் வேண்டிக் கொண்டான். திருத்தொண்டர்களின் தெய்வீக வரலாற்றை தன்னால் எடுத்துப் பாட இயலுமா என்று திகைப் படைந்தார் சேக்கிழார் பெருமான். இறைவன் அவருக்கு முதல் அடி எடுத்துத் தந்தான். அடியார்களுடைய வாழ்வும், வாக்கும், எண்ணங்களும் அறிவிற்கு அப்பாற்பட்டவை. உட்பொருள்கள் நிறைந்தவை. அவற்றின் பெருமையைப் புறக்கருவிகளால் அடைவதோடு மட்டும் நின்றுவிடக்கூடாது. பெரியபுராணக் கருத்துக்களை பகுத்தறிவுப் பார்வையோடு பார்க்கலாம். தத்துவப் பார்வையோடு பார்க்கலாம். இலக்கியக் கண்ணோட்டத்தோடு பார்க்கலாம். இவை ஓரளவு உதவும். சேக்கிழார் பெருமான் இவற்றிற்கு அப்பால் போக வேண்டும் என்கிறார். சிந்தையுள் சார்ந்துள்ள அறியாமையாகிய இருளைப் போக்க திருத்தொண்டர்புராணம் உதவும் என்றே சேக்கிழார் பெருமான் கருதுகின்றார். அந்த இருளைப் போக்கிக் கொள்ள நேரம் வந்துவிட்டது என்கின்ற அகத் தூய்மையோடு பெரியபுராணத்தைப் படிக்கவல்லார்க்குநாயன்மார்களுடைய இறை அனுபவம் தானாகவே கிட்டிவிடும். இது இறை உணர்வாளர்கள் பெற்ற அனுபவமாகும். நாம் எல்லோரும் அதைப் பெற முயல்வோம்!

# நம் நாட்டுச் சித்தர்கள்

டாக்டர் இரா. மாணிக்கவாசகம்
தமிழ்ப்பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

## 7. உரோமரிஷி

வைத்திய நூல் வல்லுநராகிய இவரைப் புசுண்டரின் மகன் என்பர். உரோமரிஷி 500 என்னும் நூலில் 'புசுண்டருடைய பிள்ளை ரோமன்' என்று தம்மைத்தாமே சுட்டிப் பாடுவதால் இதனை அறிய முடிகிறது. சித்தர்கள் பாடிய நூல்களைச் சட்டைமுனி பறித்துக் கிழித்தபோது புசுண்டர் தம் புத்திரராம் இவரது பாடல்களைத் தம் சட்டையுட் செருகி ஒளித்து பொதியமலைக்குக் கொண்டு போய் அகத்தியருக்குக் காட்ட அவரதை வாங்கிக் குகைக்குள் ஒளித்தனர் என்றும், மறுபடி நெடுங்காலம் அவருக்குத் தொண்டு செய்து அவரிடம் இவர் அதை வாங்கினார் என்பதை 'உரோமரிஷி 500' என்னும் நூலுள் *164, 165*-ஆம் பாடல்கள் வாயிலாக அறியலாம். இந்நிகழ்ச்சி கொண்டு இவரைச் சட்டைமுனி காலத்தவர் என எண்ண வேண்டியுள்ளது. எந்தவிதமான அக, புறச் சான்றுகளும் இல்லாததால் காலத்தைக்கணிப்பது மிகவும் அரிது, எனினும், சித்தர்கள் இயக்கம் கி.பி. 5-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகே முழு வளர்ச்சி பெற்றது. ஆதலின் இக்காலத்திற்குப் பின்னர் இவர் தோன்றி இருத்தல் கூடும். சித்தர்கள் கூட்டம் பெருத்திருந்த காலம் 6,7,8-ஆம் நூற்றாண்டுகள் எனலாம். எனவே, இவர் இக்காலத்தில் ஏதேனும் ஒரு கால கட்ட த்தில் வாழ்ந்திருத்தல் கூடும்.

இவர் உரோமரிஷி ஐந்நூறு முதலிய நூல்கள் அன்றி பஞ்ச பட்சிச் சாஸ்திரம் என்னும் பட்சி சாஸ்திரமும் பாடியுள்ளார்.

சித்தர் ஞானக்கோவையில் சுமார்13 பாடல்கள் இவர் பெயரில் காணப்படுகின்றன.

'பாரையா குதிரைமட்டம் பாய்ச்சல் போச்சு'
'மூடாமல் சிறிதுமனப்பாடம் பண்ணி'
'முழுதுமவன் வந்ததுபோல் பிரசங்கித்து'

முதலிய காலத்தால் மிகப் பிற்பட்ட சொற்கள் இவர் பாடல்களில் காணக்கிடக்கின்றன. எனவே, காலத்தால் மிகப் பிற்பட்ட யாரேனும் இதனை இப்பெயரில் எழுதிச் சேர்த்திருக்க வேண்டும் என எண்ணத் தோன்றுகின்றது.

இவருடைய உடம்பெல்லாம் உரோமமாயிருந்ததென்றும், ஒரு பிரமன் இறந்தால் ஓர் உரோமம் உதிரும் என்றும், இங்ஙனம் மூன்றரை கோடி பிரமன் இறக்கின் இவர் ஆயுள் முடியும் என்றும், இவர் இறக்கின் அஷ்ட கோண ரிஷி என்பவரது கோணம் ஒன்று நிமிரும் என்றும் கூறும் கதை ஒன்றும் வழங்கி வருகின்றது. திரு ஆர்னால்டு அவர்கள் தம் நூலுள் இவரது வைத்தியம் 500 என்னும் நூலின் இரண்டாவது பாடலைக் குறித்துள்ளார்

'அம்பரத்திலாடுகின்ற வையர்பாத மனுதினமு
மனதில் வைத்து அருளும்பெற்று
தம்பரத்திலெனையாண்ட புசுண்டர்
பாதஞ்சதா
நித்தம் பூசைபண்ணித் தாசனாகி
பம்பரம் போலுலகமெல்லா மாட்டி வைக்கும்
பராபரத்தின் கிருபையதாற் பாசநீக்கும்
செம்பருத்திப் பூவதுபோல் சிவந்துநின்ற
சின்மயத்தில் பாதமலர்ச் சோதிகாப்பே'

என்பது அப்பாடல்.

## 8. கபிலர்

முன் கண்டபடியே சங்க இலக்கியங்களான அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை, குறுந்தொகை, நற்றிணை, முதலியனவற்றில் குறிஞ்சித்திணைப் பாடலையும்; பத்துப்பாட்டில் குறிஞ்சிப் பாட்டு; பதிற்றுப்பத்தில், ஏழாம்பத்து முதலியனவற்றையும் புறநானூற்றிலும் திரளான பாடல்களையும் பாடிய கபிலரின், இச்சித்தர் வேறானவர் எனபதில் ஐயமில்லை.

திருமுறையில் குறிக்கப்படும் கபிலதேவரும் சித்தர் கபிலரும் ஒன்றானவரா, வேறானவரா என்னும் கருத்து தெளிவாகவில்லை. கருவூர்த்தேவர், கருவூரார் இருவரும் ஒருவர் எனக் கூறுவதுபோல இவர் இருவரையும் ஒருவர் எனக் கூறவும் வாய்ப்புள்ளது.

பத்திரகிரியார் தம் புலம்பலில்

'அதிகபிலன் சொன்ன வாகமத்தின்
சொற்படியே
சாதிவரையில்லாமற் சஞ்சரிப்ப தெக்காலம்'

எனக் குறிக்கிறார். ஆதிகபிலன் என இவர் குறிப்பது யாரை என்பது தெளிவாகவில்லை. என்றாலும் 'ஆகமம் சொன்ன கபிலன்' என்ற குறிப்பினால் உறுதியாகச் சங்ககாலக் கபிலராக இருக்க முடியாது என்பது புலனாகிறது.

வடக்கே வாழ்ந்து சாங்கிய நூல் எழுதியதாகக் கூறப்படும் கபிலரினும் இந்தச் சித்தர் வேறானவரா என்பதும் புலனாகவில்லை.

பல்வேறு நாடுகளுக்குச் சென்று வந்ததாகப் போகரைப் பற்றிக் கூறப்படுவதுபோலத் தமிழ்நாட்டில் இருந்து வடக்கே சென்றுஇவரே யோகம் பற்றி எழுதி இருக்கவும் கூடும்; வேறானவர் என்ற கருத்தும் நிலவுகின்றது.

இவருக்கு முன்னும் பின்னும் இப்பெயருடன் பலர் வாழ்ந்தனர் என்றும், தொல் கபிலர் என்பவர் சங்க காலக் கபிலரினும் மூத்தவர் என்றும், கபிலர் அகவல், பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள இன்னா நாற்பது, பதினோராம் திருமுறையில் உள்ள மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை சிவபெருமான் திருவந்தாதி என்பனவற்றைப் பாடியவரும் ஒருவரே என்ற கருத்தும் நிலவுகின்றது.

கபிலன், கர்த்தமப் பிரஜாபதியின் மகன். தாய் வேதவதி, சகர சக்ரவர்த்தி இந்திர பட்டத்தை விரும்பித் தொண்ணூற்றொன்பது அசுவமேதங்களை முடித்து நூறாவது செய்யத் தொடங்கி பரியை அலங்கரித்துப் பட்டங்கட்டி தன் மக்கள் அறுபதினாயிரவரையும் அதற்குத் துணையாக உடன் செலுத்த அவ்வசுவம் திக்

விஜயம் செய்து கொண்டிருப்பது கண்ட இந்திரன் தன் பதவிக்கு இடுக்கண் வந்தமை கண்டு திடுக்கிட்டு அவ்யாகம் முற்றுப்பெறா வண்ணம் புரவியைப் பற்றிப் பாதலத்தில் தவம் செய்து கொண்டிருந்த இக் கபிலராச்சிரமத்திற் கட்டிவிட்டகல; புரவியைப் புவியெங்குந் தேடி காணாது பூமியைத் தோண்டிக் கொண்டே சென்று, பரியையும் அருகே தவம் செய்யும் முனிவரையும் கண்ட சகரபுத்திரர் இம்முனி வனே இதைக் களவிட்டவனென்று கருதித் துன்பம் செய்யத் தொடங்குகையில், முனிவர் வெகுள அறுபதினாயிரவரும் கோபாக்கினியால் சாம்பலாயினர். (சகரர்தோண்டியதே சாகரம்) அஞ்சுமான் அப்புரவியைக் கபிலர் பால் யாசித்துப் பெற்றுச் சென்றான். பின்னொரு காலத்தில் பகீரதன் கடுந்தவம் செய்து அனேகம் கஷ்டப்பட்டு ஆகாய கங்கையை வருவித்து அவர்கள் உடலை நனைப்பித்து முத்தி பெறச் செய்தனன்.

திருவள்ளுவ நாயனாருடைய சகோதரரில் ஒருவர், இவருடைய தாய் தந்தையர் நியமனப் படி இவர் பிறந்த உடனே ஓராற்றங்கரையில் விட்டகல, திருவாரூர் வேதியரில் ஒருவர் வளர்க்க வளர்ந்து இடைச் சங்கப் புலவரில் ஒருவராய் விளங்கியவர்.

இவ்வாறு ஈக்காடு ரத்தினவேலு முதலியார் இயற்றிய சிறப்புப் பெயர் அகராதியில் சில சேதிகள் காணப்படுகின்றன.

திரு. ஆ. சிங்காரவேலு முதலியார் இயற்றிய அபிதான சிந்தாமணி என்னும் நூலுள் வேறு சில செய்திகள் காணப்படுகின்றன.

கார்த்தமப்பிரசாபதியின் புதல்வனாகிய கபிலரே சாங்கிய யோகம் இருடிகளுக்கு உபதேசித்தவர் என்றும், இவருடன் இராவணன் சண்டைக்கு வந்து இவரது திருமேனியில் சுவாலையால் ஒளி மழுங்கிச் சோகித்து இலங்கைக்குச் சென்றவன் என்றும் காணப்படுகின்றது. தன் தாய் தந்தையர் தன்னைவிட்டுப் பிரிய வருந்துகையில், .

'கண்ணுழையாக் காட்டிற் கருங்கற்
றவளைக்கும்
உண்ணும்படியறிந்தூட்டுமவர்-நண்ணும்
நமக்கும் படியளப்பார் நாரியோர் பாகர்
நமக்குத் தொழிலென்ன தான்'

என்று கவி கூறினர். இக்கவி கேட்டுத் தாய் பிரிந்தபின் ஒரு வேதியன் வீட்டில் வளர்ந்து உபநயன காலத்தில் மற்ற வேதியர் இவன் வேதியன் அன்றென்று மறுக்க அவருடன் கன்மத்தாற் சாதியன்றிச் சன்மத்தால் இல்லையென்று வாதிட்டு நீங்கித் தம் பெயரால் கபிலரகவல் பாடி தவஞ்செய்தவர் என்ற கருத்தும் இந்நூலில் காணப்படுகின்றது.

## 9. கருவூரார்

கொங்கு நாட்டில் உள்ள கருவூரில் வாழ்ந்தவர். ஆதலின் இப்பெயர் பெற்றார் என்பர்.

சைவர்கள் போற்றும் திருமுறைகளில் ஒன்பதாம் திருமுறைகளில் பத்து பதிகங்கள் இவர் பெயரில் காணப்படுகின்றன. இவர் பாடிய பதிகங்களின் இறுதியில் 'கருவூரன்' கருவூரனேன்' என்று தம்மைக் குறித்துக் கொள்ளுகிறார். பத்து பாடல்களில் மூன்றாவது தவிர பிறவற்றில் தம் பெயரைக் குறிக்கின்றார். நெல்லைத்தல புராணத்திலும், கருவூர் தலபுராணத்திலும் இவரது வரலாற்றை விரிவாகக் காணலாம்.

கருவூர்த் தலபுராணத்தில் காணப்படும் கருவூரார் அல்லது கருவூர்த் தேவர் அகத்தியருடன் வாழ்ந்ததாகக் குறிக்கப் படுவதால் இவர் சங்க காலத்தைச் சார்ந்தவர் எனக் கொள்ள வாய்ப்பு உண்டு. எனினும் அகத்தியர் என்ற பெயரில் பலர் இருந்தனர் என்பதால் இவர் எந்த அகத்தியர் காலத்தவர் என்ற ஐயம் எழுகின்றது. இவர் குறிக்கும் சித்தர் அகத்தியர் காலம் கி.பி. 6, 7 8-க்குள் அடங்கியவர். ஆதலின் இவர் காலமும் இவற்றுள் அடங்கும் எனலாம். மேலும் திருவிசைப்பா பாடிய கருவூர் தேவர் 9-10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் எனபதால் கருவூர்த் தல புராணம் கூறும் அகத்தியர் சித்தர் அகத்தியரே, என்பது தெளிவு.

ஒன்பதாம் திருமுறையில் காணப்பெறும் கருவூர்த்தேவரது பாடல்களின் நடை போக்கு இவற்றோடு கருவூர்ச் சித்தர் பாடல்களின் நடை போக்கு, இவற்றை ஒப்பிட்டுப் பார்க்கின் இரண்டும் வேறு வேறானவையாகத் தோன்றும்.

எனினும் இருவரும் வேறுபட்டனர் என்னும் முடிவுக்கும் வரமுடியவில்லை. இராமலிங்க அடிகள் பாடிய திருவருட்பாவின் முதல் திருமுறை நான்காம் திருமுறை ஆறாம் திருமுறை ஆராய்ந்தால் இவற்றின் இடையே கருத்து முதலியனவற்றில் பெரிய வேறுபாடு தெளிவாகத் தெரியும். குறிப்பாக முதல் ஐந்து திருமுறைகளைப் படித்தவர்களும் ஆறாம் திருமுறையைப் படிப்பின் கருத்தில் காணப்படும் மாற்றம் மட்டும் கொண்டு நோக்குவாரானால் இரண்டு பகுதியும் வேறு வேறு ஞானியரால் பாடப்பட்டன என்பர். ஆதலின் இங்ஙனமே கருவூர்த்தேவரது பாடலும் கருவூரார். பாடலும் கருத்தில் வேறு படினும் இயற்றியவர் ஒருவர் எனக் கொள்ளவும் இடமுண்டு. சமயத்துறையில் ஈடுபட்டிருந்தபோது கருவூர்த் தேவர் என்ற பெயரோடும் பின்னர் சமயம் கடந்த ஆன்மீக நெறியில் தொடர்ந்தபோது கருவூரார் என்ற பெயரிலும் பாடியிருக்கலாம் எனக் கொள்வது பொருத்தமாக உள்ளது. திருமழிசை ஆழ்வாராக விளங்கியவர் ஆன்மீக நெறி பற்றிய பின்னர் சிவவாக்கியராக ஆனார் என்பதால் நம் கருத்து வலுப்பெறுகிறது.

இவர் அந்தணர் குலத்தில் பிறந்தவர் என்றும் போகரது மாணவராய் இருந்தார் என்றும் கூறுவர்.

தஞ்சையில் ராஜராஜ சோழன் கட்டிய கோயிலில் சிவலிங்கப் பிரதிஷ்டைக்கு இவரே அஷ்டபந்தனம் செய்வித்தார் என்று ஒரு சேதி வழங்கி வருவதுகொண்டு இவரது காலம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு என்பர்.

கருவூரார் பூஜாவிதி என்ற பெயரில் 30 பாடல்கள் சித்தர் ஞானக்கோவையில் காணப்படுகின்றன. (தொடரும்)

# திருக்கோவில் புனரமைப்பு மற்றும் பாடல் பெற்ற திருத்தலங்களுக்கு நிதி உதவி

தமிழக முதல்வர் டாக்டர் **ஜெ. ஜெயலலிதா** அவர்கள், திருக்கோவில் புனரமைப்பு மற்றும் பாடல் பெற்ற திருத்தலங்களுக்கு நிதி உதவி அளித்து அக்கோவில்களின் திருப்பணி சிறப்புற நடைபெற உதவி வருகிறார்கள். அதன் அடிப்படையில் முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கீழ்க்கண்ட 28 திருக்கோவில்களுக்கு ரூ. 41 லட்சத்து 22 ஆயிரம் வழங்க உத்தரவிட்டு உள்ளார்.

நிதி உதவி பெறும் கோவில்களும், அவற்றுக்கு வழங்கப்படும் உதவித் தொகை பற்றிய விவரமும் வருமாறு:

| | ரூபாய் |
|---|---|
| அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில் திருவண்ணாமலை | 2,00,000 |
| அருள்மிகு விசுவநாதர் திருக்கோவில் திருவலம் | 1,50,000 |
| அருள்மிகு எறும்பீசுவரர் திருக்கோவில், திருவெறும்பூர் | 70,000 |
| அருளமிகு பிரம்மசிரண்தடீசுவரர் திருக்கோவில், கண்டியூர், திருவையாறு வட்டம் | 1,50,000 |
| அருள்மிகு விருத்தகிரீசுவரர் திருக்கோவில் திருப்புன்னவாசம், அறந்தாங்கி வட்டம் | 1,50,000 |
| அருள்மிகு திருச்சோற்றுநாதர் திருக்கோவில், திருச்சோற்றுத்துறை திருவையாறு வட்டம் | 1,50,000 |
| அருள்மிகு விருதபுரீசுவரர் திருக்கோயில், தில்லைஸ்தானம் | 1,50,000 |
| அருள்மிகு திருப்பாலைவனநாதர் திருக்கோவில், திருப்பாலைத்துறை | 1,50,000 |
| அருள்மிகு பசுபதீசுவரர் திருக்கோவில் கோவில், அரூர், பாபநாசம் வட்டம் | 1,50,000 |
| அருள்மிகு ஆபத்சகாயேசுவரர் திருக்கோவில், திருப்பழனம் | 1,50,000 |
| அருள்மிகு மணவாளேசுவரர் திருக்கோவில், திருவேள்விக்குடி, மயிலாடுதுறை வட்டம் | 1,50,000 |
| அருள்மிகு வேதபுரீசுவரர் திருக்கோவில், திருவந்திபுரம், செய்யாறு | 1,50,000 |
| அருள்மிகு வாலீசுவரர் திருக்கோவில் குரங்கணில் முட்டம் | 70,000 |
| அருள்மிகு சிவகுருநாதசாமி திருக்கோவில், சிவபுரம், திருவிடைமருதூர் வட்டம் | 1,50,000 |
| அருள்மிகு கற்கடேசுவரர் திருக்கோவில், திருத்தேவன்குடி, திருவிடைமருதூர் வட்டம். | 2,00,000 |
| அருள்மிகு சற்குணநாதசாமி திருக்கோவில், கருவேலி | 1,00,000 |
| அருள்மிகு ரங்கநாதசாமி திருக்கோவில், திருநீர்மலை | 1,00,000 |
| அருள்மிகு நீலமேகப்பெருமாள் திருக்கோவில், தஞ்சை மாமணிக்கோவில், தஞ்சாவூர் | 1,50,000 |
| அருள்மிகு சவுமியநாராயணப் பெருமாள் திருக்கோயில், திருகோஷ்டியூர் | 1,00,000 |
| அருள்மிகு வைஷ்ணவ நம்பி திருக்கோவில், திருக்குறுங்குடி | 2,82,000 |
| அருள்மிகு கண்ணபிரான் திருக்கோவில், ஸ்ரீவைகுண்டம் | 6,50,000 |
| அருள்மிகு உலகளந்த பெருமாள் திருக்கோவில், காஞ்சிபுரம் | 1,00,000 |
| அருள்மிகு பாண்டவதூதப் பெருமாள் திருக்கோவில், காஞ்சிபுரம். | 1 00 000 |
| அருள்மிகு சொன்னவண்ணம் செய்த பெருமாள் திருக்கோவில், காஞ்சிபுரம் | 1 00 000 |
| அருள்மிகு கோவிந்தராஜப் பெருமாள் திருக்கோவில், சிதம்பரம் தென் ஆற்காடு மாவட்டம். | 70 000 |
| அருள்மிகு மகர நெடுங்குழைக்காதர் திருக்கோவில் தென் திருப்பேரை | 20 000 |
| அருள்மிகு பக்தவச்சலப் பெருமாள் திருக்கோவில் திருக்கண்ணமங்கை, நன்னிலம் | 80 000 |
| அருள்மிகு கோலவல்லிராமன் மரகதவல்லி தாயார் திருக்கோவில், திருவெள்ளியங்குடி தஞ்சாவூர் | 80 000 |

இவை அனைத்தும் பாடல்பெற்ற, மங்களாசாசனம்செய்யப்பட்ட திருக்கோவில்கள் ஆகும்.



# நமது சமய முறைகளில் அறிவியல் கருத்துக்கள்

பேராசிரியர் டாக்டர் ஜே. ஜீ. கண்ணப்பன், சென்னை.

தமிழகத்திலே இருக்கும் கோயில்களின் அமைப்பு, மேலும் அதனின பிரமாண்டம் நமக்கெல்லாம் வியப்பு. இத்தனை பெரிய அளவில், நுணுக்கமான பொறியியல் தத்துவத்துடனும், மற்றும் கண்ணுக்கும், கருத்துக்கும் இனிமைதரும் விதமாக கட்டப்பட்ட கோயில்கள் நமது வாழ்வில் நாம் பெற்ற இன்பமாகும்.

மற்றைய நாட்டினர் சரித்திரத்திலே வாழ்ந்த முறைகளுக்கு ஒப்பிடும்போது இக்கோயில்களின் ஆதிகால வரலாற்றில் நாம் அறிவது, கணக்கில் எண்ணப்பட முடியாது. முன்காலத்தில் தமிழர் கலாச்சாரம் சமுதாய விதிமுறை மற்றும் வாழும் முறைகளில் நாகரீகத்தை எடுத்துக்காட்டுகிறது.

இந்த கோயில் மற்றும் கோயில்களில் நடக்கும் பிரார்த்தனை முறைகள் மற்றும் வருடம்பூராவும் நடத்தும் கோயில் விழாக்களைப்பற்றி நாம் அறிதல் வேண்டும். அவை ஏதோ நடக்கிறதா? அல்லது அதனில் அறிவியல் சார்ந்த தத்துவங்கள் உள்ளனவா? ஆராய்வோம்.

ஊர் நடுவே கோயில்கள் மக்களின் உள்ளத்தில் நல்ல உணர்வைக் கொணர்கிறது. பண்பாடு மற்றும் வளம் நிறைந்த உள்ளம் திரும்பட இயங்க கோயில் என்ற புனித இடம் தேவை. சாதாரணமாக இயங்கும் மனிதனின் எண்ண அலைகள் பற்றி, நாம் எல்லாம் உணர்வதாகும். அதே மனிதன் கோயில் சென்றுவருவோமேயானால், எண்ண அலைகள் பக்குவப்படுவதை நாம் உணரலாம். மக்கள் கூடும் இடமாகிய கோயில், ஒன்றுபட்ட மக்களுக்கும் சமமான சமத்துவம் மனப்பான்மையை ஏற்படுத்துகிறது. ஆண்டவன் முன் யாவரும் சமம். எல்லா மக்களும் ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்ற உணர்வு கோயிலுக்குள் செல்லும் மக்களுக்கு ஏற்பட வேண்டும். ஏற்படும்.

கலைகள் நிறைந்த தமிழ்நாட்டில், கலை நிபுணத்துவத்தை வெளிப்படுத்த முன்காலத்தில் அறிவும், ஆற்றலும் கொண்ட அரசர்கள், ஒரு கலைக் கூடமாக கோயில்களைப் படைத்தார்கள். அதனில் புனிதம் ஏற்பட கோயில் நடுவே எலலாம் வல்ல வாலறிவன், மாசிலான், வேண்டுதல் வேண்டாமையிலான் தத்துவம் கொண்ட கருப்பொருளாக கற்சிலைகள் எழுப்பப்பட்டன. அதனை வழிபடும்போது ஏற்படும் உள்ளக்கிளர்ச்சி உள்ளுவதில உயர்வை ஏற்படுத்துகிறது. வழிபடும் முறைகளும் அறிவியல் சார்ந்தவையே. பூஜைக்குரிய பொருள்கள் கவனத்துக்குரியவை.

பச்சலைகளான விலவமும், துளசியும் உடலின் நலனுக்கு உகந்தது. அதனில் வரும் சாறு உடலிலே ஈர்க்கப்பட்டால், எல்லா அவயங்களும் தூண்டப்பட்டு சிறப்பாகயியங்கும். உடல்திசுக்கள் தூண்டப்பட்டு சிறப்பாக செயல்படும்.

கற்பூரம் ஆவி உடலிலேபட்டால புத்துணர்ச்சியைக் கொடுக்கிறது. சோர்வுற்ற ஒருவனுக்கு கற்பூர ஆவியோ வாசனையோ நல்ல மருந்தாக பயன்படும். ஆங்கிலேய மருத்துவத்தில் 'Campher in oil' என்ற மாந்து முறையாக உபயோகப்படுத்தப்பட்டது. இன்னும் நமது கோயில்களிலும் வீட்டிலும் கற்பூரம் கொளுத்துவதால நல்ல பலனைப் பெறலாம். கற்பூரம் சாம்பிராணி நல்ல உடல்வார்க்கும் வாசனைப்பொருட்கள்.

இந்த உண்மையை இதுவரை நாம் உணரவில்லை. நாளா வட்டத்தில் ஏன் எதற்கு எப்படி என்று ஆராய மறுத்த நமது மக்கள் ஆண்டவன் மேல் உள்ள பக்தியால் நம்பிக்கையுடன ஒற்றிக் கொள்ளுகிறார்கள். அதனில் அறிவியல் தத்துவம் உணரவில்லை. இன்றைய சில ஆராய்ச்சிகள் மேற்கூறிய உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளன.

உள்ளவளம் பெருகி வரும் காலை, உடல் நலமும் பேணுவதாக நமது சமூக, சமுதாய சமய முறைகளைக் காண்கிறோம். பிரார்த்தனைகள் நடக்கும்போது படையல் என்ற குறிக்கோளுடன் ஆராதனை நடத்துகிறோம். பிரசாதம் மக்களுக்கு வழங்கப்படுகிறது. இதனில் ஊட்டச்சத்து முறைகளை நாம் சமூகத்திற்குக் கொணருகிறோம். படையலில் சமர்ப்பிக்கப்படும் உணவுப் பொருள்கள் பலவகை. எல்லாவகை ஊட்டச்சத்தும் உடையவை.

மற்றும் ஆராதனை முறைகளை ஆராய்வோம். நியாயமான எல்லா முறைகளும், எல்லோருடைய நலனைத் தான வேண்டுமெனக் கூறுகிறது. சமுதாயம் இன்பமும் ஆனந்தமும் எல்லா வளமும் பெற வேண்டுமென்பதே அடிப்படை பிரார்த்தனையாக உள்ளன.

சமஸ்கிருதத்தில்.

'சர்வே ஜனோ சுகினோ பாவந்து' எனவும்

தாயுமானசுவாமிகள்,

''எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டுவதே
யில்லாமல்
வேறொன்றும் அறியேன் பராபரமே' என்றும்

கூறுவதை நாமறிவோம்''.

சமுதாயத்தில் எல்லா நல்ல வளமும் பெருகவேண்டுவது நாமறிவோம். மேலும் சமுதாய உணர்வுக்கு 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமெல்லாம்' அத்னை 'அன்பருக்கு பணிசெய்ய, தானே வந்தெய்தும் இன்பம் எனவும் கூறினார்கள் 'கலையாத கல்வியும் குறையாத செல்வமும் முதலான தேவைகளைக் குறைபடாமல் நாம் பெறுவோமேயானால், நாம் அடையும் இன்ப நிலையை நாமேயறிவோம்.

இந்த சமுதாய நலன் கருதி வேண்டும் பிரார்த்தனை முறைகள் பலவுண்டு. தனி பிரார்த்தனையைவிட கூட்டுப் பிரார்த்தனை முறைகளை நமது கோயிலிலே காணலாம். இதனால் சமுதாய ஒற்றுமையை வளர்க்க முடிகிறது. ஒருங்கிணைக்கப்பட்ட பிரார்த்தனையில் இடப்பட்ட பாடல்கள் இசையை எழுப்புகிறது.

மனத்திற்கு இதம் இருக்குமேயானால், உடலும் மூளையும் சிறப்பாக இயங்குகிறது. கூடவே வாத்திய இசை இயங்குமேயானால் சமத்துவ சூழ்நிலையில், சமுதாய மக்கள் மன மகிழ்வுடன் வாழத் தூண்டப்படுகிறார்கள். இந்தக் குறிக்கோளே நலமாக இயங்க வேண்டித் தான் வேளாவேளைக்கு பூஜைகள் அனுசரிக்கப்படுகின்றன. நாள்தோறும் பூஜைகள் நடக்கின்றன. ஆண்டுபூராவும் விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

இயற்கையோடு இயைந்த வாழ்வு நமது அறிவியல் சமயம் அதனைக் காணுவது நமது

## சமயத்தின் இன்றியமையாமை

**Religion without Science is Lame**

**Science without Religion is blind**

**விஞ்ஞானம் கலவாத சமயம் நொண்டி**

**சமயம் இல்லாத விஞ்ஞானம் குருடு**

**ஆகவே மக்கள் வாழ்வில் சமயம் இன்றியமையாத ஒரு தேவையாகும்.**

—டாக்டர் சாயிமாதா சிவபிருந்தாதேவி

நாட்டில்தான். அதனைச் சீர்படுத்தி செவ்வனே பாகுபடுத்தி, அதனைச் செயலில் நடைமுறைப்படுத்தியது தமிழர் கூட்டம்.

அதுதான் நாம் கடைபிடிக்கும் சமய பிரார்த்தனை முறைகள், கட்டுப்பாட்டுடன் உருவாக்கப்பட்ட கோயில் தத்துவம் அதனால் தான், மனித சமுதாயப் நவரசங்களுடனும் நாகரீகமாகவும் வாழ, பண்டைக் காலத்தில் ஊர்நடுவே கோயில் கட்டினார்கள். உன்னத அறிவியல் தத்துவத்தில் வழிபாடு முறைகளை வளர்த்தார்கள்.

கல் தோன்றி மண்தோன்றாக் காலதுதே சமயதத்துவம் உருவான இடம் நமது நாடு, ஆதிகாலத்தே தொடர்ந்து நமது சமுதாய சமய உணர்வு தனிப்பட்டவர் கற்பனையில் கதைகளாய் உண்டானது. இலக்கிய நிபுணத்துவம் நிறைவு காரணமாக சிறந்த காப்பியங்கள், காவியங்கள் இதிகாசங்கள் உருவாகினது. அஃதே நாளாவட்டத்தில் நிலைக்கப்பட்டது. மட்டுமில்லாமல், அதுவே அதிகார பூர்வமான இலக்கியம் ஆக்கப்பட்டது. இன்றோ அறிவியல் சார்ந்த சர்ச்சைகளுக்கு இந்த இலக்கியப் படைப்புகள் சமைந்துவிட்டன. எனினும் இந்த சிறந்த இலக்கியப் படைப்புகளில் அறிவியல் தத்துவம் மிகச் சிறந்து விளங்குகிறது. எடுத்துக்காட்டுகளுக்கு அழகிய மொழியில் இன்றைக்கும், என்றைக்கும் அர்த்தமுள்ள கருத்துக்களைக் காண்கிறோம்.

மொத்தமாக நமது முன்காலத்திய சமயம், அனுசரணைகள், பிரார்த்தனை முறைகள், வாழும் வகை எல்லாவற்றிலும் அறிவியலைக் காண்கிறோம்.

———



# திருஅம்பர் மாகாளம்

**அருட்கதை அரசு பொன்கண்ணபுரம் சுப்பிரமணியன்**

கொந்தன பொழிற்சோலைக் கோல வரிவண்டு
மந்தம் மலியம்பர் மகாளம் மேய
கந்தம் கமழ்கொன்றை கமழ்புன் சடைவைத்த
எந்தை கழலேத்த இடர்வந் தடையாவே

— திருஞானசம்மந்தர்

திருஅம்பர் மாகாளம் என்னும் பாடல் பெற்ற சிவத்தலம் நாகைகாயிதே மில்லத் மாவட்டத்தில் நன்னிலம் வட்டத்தில் இருக்கிறது. மயிலாடுதுறை-அறந்தாங்கி இருப்புப் பாதையில் பூந்தோட்டம் என்னும் நிலையத்திலிருந்து கிழக்கே ஒரு கல் தொலைவில் இருக்கிறது. அரிசிலாற்றின் வட கரையிலிருக்கிறது. ஊரில் தங்குவதற்குப் பல சத்திரங்களும், திருக்கோயில் விடுதியும் இருக்கின்றன. இத்தலத்தை கோயில் திருமாகாளம் என்றும் கூறுவர். இயல்பாக திருமாகாளம் என்று மக்கள் வழங்கி வருகின்றனர். காளி பூசித்துப் பேறு பெற்ற தலமாகையால் மாகாளம் என்ற பெயர் வழங்கலாயிற்று. காளம் அல்லது பாம்பு— நாககன்னிகை வழிபட்டதால் இப்பெயர் உண்டாயிற்று என்றும் கூறப்படுகிறது. கோயிலுக்குள் காளி வழிபடும் வரலாற்றைக் காட்டும் சிற்பங்களும், நாக கன்னிகை வழிபடுவதைக் காட்டும் சிற்பங்களும் இருக்கின்றன.

கோயில் நாற்புறமும் அழகிய மதில்களை உடையது; கிழக்கு வாயிலில் ஒரு கோபுரம் உள்ளது; அதன் எதிரில் திருக்குளம் உள்ளது. கோபுரத்தைத் தொழுது உள்ளே நுழைந்ததும் வலது புறத்தில் கல்யாணமண்டபம் இருக்கிறது, நந்தி, பலிபீடம் இவைகளைக் கடந்ததும் துவார விநாயகர் காட்சியளிக்கிறார். இங்கு இரண்டாவது கோபுர வாயிலைக் கடக்க வேண்டும். அதிகார நந்தி எழுந்தருளியிருக்கும் இடமாதலின் அதிகார நந்தி கோபுரம் என்று வழங்குவர். இரண்டாம் கோபுரத்தைத் தாண்டி உள்ளே சென்று மகாமண்டபத்தையடைகிறோம். அருகருகே அங்கே நாகநாதர், அம்பிகை, நாககன்னிகை முதலியவர்கள் எழுந்தருளியுள்ளார்கள். இதுவே நாககன்னிகை வழிபட்ட ஐதிகத்தைக் குறிக்கும் திருவுருவங்கள். இதற்குச் சற்று வடக்கில் காட்சி கொடுத்த நாயகரும் அருள்மிகு நடராஜப் பெருமானும் எழுந்தருளியிருக்கிறார்கள். காட்சி கொடுத்த நாயகர், திருவுருவம் கண்கவர் வனப்பினையுடையது. சிறிது மேற்கே மூலஸ்தான மூர்த்தியான மகாகாளநாதர் சன்னதியிருக்கிறது. சந்நிதியின் வலப்பக்கத்தில் துவாரகணபதியும் விசுவேசலிங்கமும், எழுந்தருளியுள்ளனர். மூலஸ்தானத்திற்குத் தெற்கே அருள்மிகு தியாகேசப் பெருமான் சன்னிதியிருக்கிறது. தம்பிரான் தோழராக சோமாசி மாற நாயனாருடைய யாகச் சிறப்பை உலகறியச் செய்த மூர்த்தி இவரே. கர்ப்பக்கிரகத்தைச் சுற்றி அறுபத்துமூவர், தட்சிணாமூர்த்தி, சிங்கார வேலர் சண்டேசர், மதங்கர் என்றமுனிவர்கள் சந்நிதிகள் இருக்கின்றன.

வெள்ளிப்பிரகாரம் வந்தால் தென்மேற்கு மூலையில் காளிகோயில் இருக்கிறது. இங்குள்ள தேவி அம்பாசுரனைக் கொன்ற வீரஹத்தி தோஷம் நீங்க மாகாளநாதரை வழிபட்டதாக தலபுராணம் கூறுகிறது. வென்ற அசுரர்களின் இருதலைகளை அம்மையின் தலையில் வைத்து முடிந்திருக்கிறார்.

இந்தக் கோயிலுக்கும் சிறிது தென்கிழக்கே அம்பிகையின் தனிக்கோயில் அமைந்திருக்கிறது. அம்பாளின் திருநாமம் அபயட்சயாம்பிகை. அடியவர்களின் அச்சத்தைப் போக்கும் அம்மையாதலின் அப்பெயர் ஏற்பட்டது. மக்கள் பொதுவாக பட்ச நாயகி என்றும் வழங்கி வந்தனராம். அன்புடையார் மாட்டு அன்புடையார் அன்பு செய்யும் அம்பிகையாதலின் அப்பெயர் பொருத்தமானதே. வடகிழக்குப் பிரகாரத்தில் சோழமன்னன் வழிபட்ட இலிங்க மூர்த்தியின் சந்நிதி மேற்கு நோக்கியிருக்கிறது.

இத்தலத்தின் தீர்த்தம், மகாகாள தீர்த்தம் அல்லது அம்ச தீர்த்தம், அதுகோயிலுக்கு எதிரிலுள்ள திருக்குளம். கோயிலுக்குத் தெற்கே ஓடுகிற அரிசிலாறும் ஒரு தீர்த்தமே. கோயிலில் ஐந்துகாலபூசை நடைபெறுகிறது. வைகாசி மாத ஆயிலிய நட்சத்திரத்தில் சோமாசிமாற நாயனார் யாகப்பெருவிழா வெகுசிறப்பாக நிகழும். திரளான மக்கள் வந்து கூடுவர். அரனும், உமையும் புலையன் புலைச்சி உருவில் யாக சாலைக்கு எழுந்தருளி அவிர்ப்பாகம் ஏற்கும் முறையில் திருவிழா மிகப் பிரபலமாக நடைபெறுகிறது.

இத்தலத்திற்குக் கிழக்கே ஒன்றரை கல் தொலைவில் அம்பல் என்று வழங்கும் அம்பர் பெருந்திருக்கோயில் என்ற பாடல் பெற்ற பதி இருக்கிறது. இவ்விரண்டிற்கும் இடையே சோமாசிமாற நாயனார் யாகம் செய்த இடம் உள்ளது. அங்கே அச்சம்தீர்த்த விநாயகர் ஒன்றும் இருக்கிறது. அருள்மிகு விநாயகர் வீற்றிருந்த கோயில் ஒன்றில் மோகினியம்மையின் அழகிய திருவுருவம் காணப்படுகிறது. இவ்விறைவினை அர்ச்சகர் தீண்டிப்பூசை செய்வதில்லை. தூரத்திலிருந்து கொண்டு, ஆடைமாலை முதலியவற்றைக் கோலால் களைவதும், சாத்துவதும் செய்கின்றனர். மிகவும் தூய்மையாக செய்யாவிடில் இன்னல் உண்டாகும் என்று அஞ்சுகின்றனர்

இத்தலத்து இறைவன் மீது திருஞான சம்பந்தர் மூன்று திருப்பதிகங்கள் பாடியருளியிருக்கின்றார். குறிஞ்சிப்பண்ணில் பாடியுள்ள பதிகத்தில் மாகாள நாதரை வழிபடுவோரை வினைசாரா, அல்லல் அடையா, இடர்சேரா குற்றம்குறுகா என்றும், அப்பெருமான் கழலை நினைப்பவர் இன்பம் எய்துவர் உயர்வான் அடைவர் என்றும் கூறுகிறார். நட்டராகப் பண்ணிலான பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும் 'அரிசிலின் வடகரைவருபுனல் மாகாளம்'' என்று அரிசிலாற்றின் வடகரையில் தலம் அமைந்திருப்பதைக் குறிக்கிறார். இந்த ஆற்றை மக்கள் அரசலாறு என்று வழங்குகின்றனர். மேலும் இப்பதிகத்தில் மாகாளத்தை பரவிப் பணிவர், வழிபடுவர், பெருமையாகப் பேசுபவர் முதலியவர்களை வல்வினை சேடையாது, உலகில் பெருமையடைவர், சூலமும் பிணியும் கவலையும் களைவர் என்று கூறுகின்றார். சாதாரிப் பண் பதிகத்தின் ஒரு பாடலில் 'காளியேத்தும் அழகனார் அரிவையோடிருப்பிடம் அம்பர் மாகாளந்தானே'' என்று இறைவனைக் காளி வழிபட்டதைக் குறிக்கிறார்.

அருணகிரிநாதர் ''இத்தலத்திற்கு ''காதோடு தோடி கலியாட ''என்று தொடங்கும் ஒரு திருப்புகழ்ப் பாடலைப் பாடியிருக்கிறார். அதை

வானோர்க்க ளீசன்மயி
லோடுகுற மாதுமண
வாளாகு காகுமர
மாமயிலின் மீதுதிரு
மாகாள மாநகரில்
மாலொடடி யார் பரவு பெருமாளே''

என்று முடிக்கிறார்.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் அம்பர் புராணம் என்ற சிறந்த நூலை இயற்றியிருக்கிறார்கள். அது இன்னும் அச்சாகவில்லை. அன்னவடிவில் இறைவன் திருமுடியைக் காணமுடியாமற்போன பின்னர் பிரமன் இத்தலத்தில் தீர்த்தத்தில் படிந்து பெருமானை வழிபட்டுப் பேறு பெற்றான். என்பதையும் இந்திரன் தன் நகரை இழந்து இத்தலத்தில் அடைக்கலம் புகுந்து இறைவனை வணங்கிப் பின்னர் அதை மீளப் பெற்றான் என்பதையும் மன்மதன் விசுவாமித்திரனால் இடப்பட்ட சாபத்தை இங்கு நீங்கப் பெற்றான் என்பதையும் அம்பாசுரனைக் கொன்ற வீரஹத்தி நீங்க காளி இங்கு வழிபட்டாள் என்பதையும் சோமாசிமாறர் வரலாற்றையும் இத்தல புராணம் விரிவாகக் கூறுகிறது.

சோமாசி மாறர், அம்பரில் பிறந்த அந்தணர். மனைவி சுசிலா தேவியார், சோமயாகம் செய்ய விரும்பினார். இறைவனே நேரில் தோன்றி அவிர்ப்பாகத்தைப் பெறவேண்டும் என்று பேரவாக் கொண்டார். திருவாரூரில் பரவையாருடன் வாழ்ந்த சுந்தரருக்கு தூதுவிளங்கீரை விருப்பமுண்டென்று தெரிந்து நாள்தோறும் அக்கீரையை அவர் மனையில் சேர்ப்பித்தார். பின் அவருடைய நட்பையும் பெற்றார். சோமாசிமாற நாயனாரின் எண்ணத்தை அறிந்த சுந்தரர் தியாகராசப் பெருமானிடம் விண்ணப்பித்தார். அவரும் சோமாசிமாறர் செய்யும் யாகத்தில் அவிபெறுவதாக அருள்புரிந்தார். அம்பரில் யாகம் தொடங்கிற்று. வைகாசி ஆயில்ய நன்னாள்; அவிபெற வேண்டிய காலம், தியாகப் பெருமாள் நீசத் திருக்கோலத்துடன் அம்மை புலைச்சியருடன் சிவகுமாரர்கள் பள்ளச் சிறுவர்களாகவும், நான்கு வேதங்கள் நாய்களாகவும் உடன் வர யாகசாலைக்கு வந்தார் சோமாசி மாறர் நீசன் வருவதைக் கண்டு பயந்தார் அங்கிருந்த அந்தணர்கள் யாகம் பழுதுபட்டது என்று ஓடிவிட்டனர். யானை முகப்பெருமான் தமது சுட்டு விரலால் 'இவரே தியாகேசர்' என்று சோமாசி மாற நாயனார்க்குக் குறிப்பால் உணர்த்தினார். அவரும் நீச வேடப் பெருமானுக்கு அவிர்ப்பாகம் அளித்தார். உடனே காட்சி கொடுத்த நாயகராக விடையேறும் விமலனாகத் தோன்றி சோமாசி மாறருக்குத் திருவருள் புரிந்தார். அஞ்சி ஓடிய அந்தணர்களும் வந்து வணங்கினர். வேதம் ஓதியும் உண்மை உணரும் ஆற்றல் உங்களுக்கு இல்லாமல் போனபடியால் ''மத்தியான காலத்து மட்டும் நீங்கள் சண்டாளர்கள் ஆகுக'' என்றுஇறைவன் பணித்தருளினார். இத்தகைய வரலாறு பெரிய புராணத்தில் கூறப் பெறவில்லை. சேக்கிழார் பெருமான் 'அம்பரில் பிறந்த அந்தணர் எத்தன்மையராயினும் ஈசனுக்கன்பர் என்றால் அத்தன்மையார் தாம் நமையாள்பவர் என்று கொள்வார்; சித்தந்தெளியச் சிவன் அஞ்செழுத்தும் ஓதும் வாய்மை நித்தந்நியமம் எனப்போற்றும் நெறியில் நின்றார்; திருவாரூர் வன்றொண்டர்பால் பெரு நட்பு கொண்டார்.'' என்பனவற்றையே இந்த நாயனார் புராணத்தில் கூறியிருக்கிறார். இத்தகைய புராண வரலாற்றுச் சிறப்புப் பெற்ற இத்தலத்து இறைவனை மனம், மொழி, மெய்களால் தொழுதேத்தி வழிபடுவோமாக!



திருச்சிற்றம்பலம்.

# அர்ச்சகர்களுக்கு ஓய்வு ஊதியம்
## சுற்றறிக்கை

ந.க.எண். 81311/92 ஜ.1 நாள்: 26-04-1993.

ஆணையர் அலுவலகம்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை—600034.

பெறுநர்
அனைத்து துணை ஆணையர்கள் பெயரில்

ஐயா,

பொருள்:—ஓய்வூதியம்— இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை— திருக்கோயில் பணியிலிருந்து ஓய்வு பெற்ற அர்ச்சகர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல்—குறித்து.

பார்வை:—1. அரசாணை நிலை எண். 346, வணிக வரி மற்றும் அறநிலையத்துறை நாள்-1-10-1992.
2. அரசாணை நிலை எண். 66, வ.வ. (ம) அறநிலையத் துறை, நாள்: 3—3—1993.

பார்வை-1ல் கண்ட ஆணையின்படி தமிழ்நாடு திருக்கோயில்களில் அர்ச்சகர்களாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற அர்ச்சகர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கும் திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் பயன் பெறக் கூடிய அர்ச்சகர்கள், திருக்கோயில்களின் கால பூஜைகளைச் செய்யக்கூடிய, வேத ஆகமங்களில் பாண்டியத்துவம் பெற்று திருக்கோயில்களில் யாகங்கள் மற்றும் ஹோமங்கள் நடத்துபவர்களாகவும், கும்பாபிஷேகங்களை முன்னின்று நடத்தக்கூடிய தகுதி வாய்ந்தவர்களாகவும் இத்தகைய தகுதிகளைப் பெற்று திருக்கோயில் அர்ச்சகர்களாகப் பணிபுரிந்து பணியிலிருந்து ஓய்வு பெற்ற சைவத் திருக்கோயில்களில் பணியாற்றிய 350 அர்ச்சகர்களுக்கும், வைணவத் திருக்கோயில்களில் பணியாற்றிய 150 அர்ச்சகர்களுக்கும் ஆக 500 அர்ச்சகர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 300 வீதம் ஓய்வூதியம் அளிக்க அனுமதிக்கபபட்டுள்ளது. இத்தகைய அர்ச்சகர்கள் திருக்கோயில்களில் 20 ஆண்டுகளுக்குக் குறையாமல் பணிபுரிந்து ஓய்வு பெற்றவராகவும் வேறு வருவாய் மூலம் மாதம் ரூ. 300-க்கும் கீழ் வருவாய் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

இந்த ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பயன் பெறக்கூடிய நபர்களை துணை ஆணையர் வாரியாக கீழ்க்கண்ட எண்ணிக்கையின்படி பரிசீலிக்க முடிவு செய்யப்படுகிறது.

| | | சைவத் திருக்கோயில் அர்ச்சகர்கள் | வைணவத் திருக்கோயில் அர்ச்சகர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | சென்னை | 20 | 10 | 30 |
| 2. | வேலூர் | 23 | 8 | 31 |
| 3. | சேலம் | 20 | 10 | 30 |
| 4. | கோவை | 15 | 10 | 25 |
| 5. | மயிலாடுதுறை | 52 | 23 | 75 |
| 6. | தஞ்சாவூர் | 76 | 23 | 99 |
| 7. | திருச்சி | 42 | 18 | 60 |
| 8. | மதுரை | 35 | 15 | 50 |
| 9. | சிவகங்கை | 15 | 10 | 25 |
| 10. | திருநெல்வேலி | 52 | 23 | 75 |
| | கூடுதல் | 350 | 150 | 500 |


இதில் தகுதி வாய்ந்த நபர்கள் மேலே கண்ட பிரிவுகளில் இல்லை என்றால் தகுதி வாய்ந்த நபர்கள் அடுத்த பிரிவுகளில் உள்ள இடத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்படும். எனவே, துணை ஆணையர்கள் தங்களது சரகத்திற்குட்பட்ட உதவி ஆணையர்கள் மூலம் இந்த ஓய்வு ஊதியத் திட்டம் செயல்படுவதற்காக தகுதி வாய்ந்த நபர்களிடம் மனுக்களைப் பெற்று ஒவ்வொரு மாவட்ட நிர்வாகக் குழுத் தலைவர் பரிந்துரையின் பேரில் மாநில தேர்வு குழுவுக்கு பரிந்துரைத்து அனுப்ப கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த ஓய்வு ஊதியத் திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட வேண்டி உள்ளதால் இதில் தனிக் கவனம் செலுத்தி தங்களது பிரிவில் இந்த ஓய்வூதியம் திட்டத்தினைப்பயன்பெறக் கூடிய வகையில் திருக்கோயில்கள் மூலம் தகுந்த விளம்பரங்களைத் தங்களது சரகத்தில் செய்யக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தேவையான விண்ணப்பப் படிவங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. அந்த படிவங்களை மனுதாரர்கள் பூர்த்தி செய்து உரிய சான்றுகள் மற்றும் பாஸ்போர்ட் சைஸ் போட்டோ ஆகியவைகளுடன் உதவி ஆணையர் அல்லது துணை ஆணையர் மூலம் மாவட்டக் குழுத் தலைவரின் பரிந்துரை பெற்று விரைவில் அனுப்பிவைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த குறிப்பு பெற்றமைக்கு ஒப்புதல் அனுப்பி வைக்க அனைத்துத் துணை ஆணையர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஒம்.) சி.கே. கரியாலி, இ.ஆ.ப.,
ஆணையர்

[உண்மை நகல் உத்தரவுப் படி]

# கந்தவேள் கருணை



**டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்**

(59)

வடிவேலண்ணல் வள்ளியம்மையாருடன் திருத்தணிகை மலைமீது உலகெலாம் உய்ய வீற்றிருக்கும்போது, வள்ளிப் பிராட்டியார் மு நகக் கடவுள் திருவடிகளை வணங்கி 'அருட் பெருங்குன்றே! இம்மலையின் சிறப்புக்களை எனக்குக் கூறியருள வேண்டும்' என்று வேண்டிக் கொண்டார். ஆறுமுக வள்ளல் அம்மையாரைப் பார்த்துத் திருவருள் சுரந்து திருவாய் மலர்ந்தருளினார்.

''வள்ளி நாயகியே! சூராதியசுரர்களுடனும் வேட்டுவரோடும் செய்த போரின் கோபம் தணிந்து நாம் இங்கு வந்தமையால் இம்மலைக்கு 'செருத்தணி' என்னும் பெயர் உண்டாயிற்று. (செரு-கோபம்-தணி-தணிதல்) இது காஞ்சி நகருக்கு அருகில் இருப்பதால் மிகவும் சிறப்புஉடையது. உமையம்மையார் மாமரத்தின்கீழ் முக்கட்பெருமானை வழிபட்ட தலம் அன்றோ காஞ்சியம்பதி.

'செங்கண் செய்யசூர்ச் செருத்தொழி
விறுஞ்சிலைவேடர்
தங்க விற்செயுஞ் செருத்தொழி லினுந்தணிந்
திட்டே
இங்கு வந்தியாம் இருத்தலால் செருத்தணி
என்றோர்
மங்க லந்தரு பெயரினைப் பெற்றிதிவ்
வரையே.''

'மலர்களில் சிறந்தது தாமரை; .ஆறுகளில் சிறந்தது கங்கை; பதிகளில் சிறந்தது காஞ்சி; அதுபோன்று மலைகளில் சிறந்ததுசெருத்தணி.

விரையிடங் கொளும்போதினுள் மிக்கபங்கயம்
போல்
திரையிடங் கொளும் நதிகளிற் சிறந்தகங்
கையைப்போல்
தரையிடங் கொளும் பதிகளிற் காஞ்சியந்
தலம்போல்
வரையிடங் களிற் சிறந்ததித் தணிகைமால்
வரையே''

'புல்லாங்குழல் ஊதி, யாழ் மீட்டி, ஏழிசையுடன்இம்மலையின்கண் நாம்திருவிளையாடல் புரிவோம். எம் தந்தையராகிய அந்தி வண்ணர் திருக்கயிலாய மலையை விரும்பி யிருப்பது போல, உலகில் பல மலைகள் இருந்தும் எமக்கு இம்மலையில் மிகுந்த அன்பு உண்டு. இந்திரன் எம்மைப் பூசிக்கும்பொருட்டு இம்மலையிலுள்ள சுனையில் மூன்று நீலோற்பலச் செடிகளை வைத்து வளர்த்தான். அம்மூன்று செடிகளிலிருந்து முறையே காலையில் ஒன்றும், உச்சி வேளையில் ஒன்றும், மாலையில் ஒன்றுமாக மூன்று வேளைகளிலும் மூன்று மலர்கள் மலரும். அதனால் இம்மலைக்கு நீலகிரி மலை என்று மற்றொரு பேரும் உண்டு. அந்த நீலோற்பலச் சுனையில் அன்புடன் நீராடி எம்மை வழிபட்டோர்க்கு இம்மை மறுமை நலன்கள் எளிதிற் கிடைக்கும். இம்மலையில் ஐந்து நாட்கள் தங்கியிருந்து எம்மை தரிசித்து நோன்பிருந்தவர்கள் எல்லாப் போகங்களையும் அநுபவித்து முடிவில் முத்தி வீடு பெறுவர். பாவங்கள் பல செய்தோரும் நம்பால் அன்பு கொண்டு இம்மலையை அடைந்து வழிபட்டால் நற்கதி அடைவார்கள்.

''அஞ்சு வைகல்இவ் வகன்கிரி நண்ணிஎம்
மடி
தஞ்சம் என்றுளத் தன்னியே வழிபடும்
தவத்தோர்
நெஞ்சந்தனில் வெஃகிய போகங்கள்
நிரம்பி
எஞ்சல் இல்லதோர் வீடுபே றடைந்தினி
திருப்பார்கள்''

'பாத கம்பல செய்தவ ராயினும் பாவம்
ஏதம் வைகலும் புரிபவ ராயினும் எம்பால்
ஆதாரங்கொடு தணிகைவெற் படைவரேல்
அவரே
வேதன் மாலினும் விழுமியர் எவற்றினும்
மிக்கார்.''

'கல்யாணி' இத்திருமலையில் வந்து ஒரு சிறு தர்மம் செய்தால் ஒன்றுக்கு ஆயிரம் மடங்கு அதிகமான புண்ணியம் உண்டாகும்; இம்மலையை வலம் செய்தோர் கோடி அசுவ



மேதயாகஞ்செய்த பலனையடைவார்கள். இம்மலையில் ஏற எண்ணின் ஒரு படியின்மீது கால் வைத்தவுடனே அவர்கள் வினைகள் தணிவதாலும் திருத்தணிமலை என இது பெயர் பெறும். இம்மலையின் பெருமை அளவிடற்கரியது' என்று எம்பிரான் கூறியருளினார்.

'உற்பல வரையில் வாழ்வோர் ஒரொரு தருமஞ் செய்யில்
பற்பல வாகி யோங்கும் பவங்களில் பலசெய் தாலும்
சிற்பத மாகி ஒன்றாய்த் தேய்ந்திடும் இதுவே யன்றி
அற்புத மாக இங்ஙன் அனந்தகோ டிகள் உண் டன்றே.''

வள்ளியம்மையார் அசனைக் கேட்டு உள்ளம் உவந்தார். வள்ளிநாயகியாரும் மயிலேறும் வள்ளலும் செருத்தணி மலையின் ஒரு பக்கத்தில் சிவாகம விதிப்படி சிவபெருமானை ஸ்தாபித்து வழிபட்டுச் சில நாட்கள் அங்கு வீற்றிருந்தார்கள்.

பின்னர் எம்பிரான் எம்பிராட்டியாருடன் அங்கிருந்து புறப்பட்டுக் கைலையங்கிரியின் பாங்கருள்ள கந்தகிரி அடைந்து, ஆங்குள்ள பொற்கோயிலிற் புகுந்தார். தெய்வயானையம்மையார் எதிர்கொண்டு வந்து அவரது திருவடிகளிலே வீழ்ந்து வணங்கினார். ஆறுமுக கடவுள் அவரை எடுத்துத் தழுவித் தமது பிரிவினால் வந்த துன்பத்தை மாற்றி அருளினார். வள்ளிப் பிராட்டியார் தெய்வயானையம்மையார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். ''எனக்குத் துணைவி வந்தாள்' என்று தெய்வயானையம்மை வள்ளிப் பிராட்டியை உள்ளம் உவந்து எடுத்துத் தழுவினார். பாற்கடலில் சேஷசயனத்தில் பரந்தாமன், சீதேவியும், பூதேவியும் உடனிருக்க வீற்றிருத்தல் போல எந்தை கந்தவேள் இருமருங்கும் இரு தேவியருடன் அரியணையில் இனிது வீற்றிருந்தருளினார்.

''குர்க்கடல் பருகும் வேலோன் துணைவியர் இருவரோடும்
போர்க்கடல் கொண்ட சீயப் பொலன்மணி அணைமேற் சேர்ந்தான்
பாற்கடல் அமளி தன்னில் பாவையர் புறத்து வைகக்
கார்க்கடல் பவள வண்ணன் கருணையோ டமரு மாபோல்.''

அப்போது, தெய்வகுஞ்சரியம்மையார் முருகக் கடவுளை நோக்கி, 'என் இளையாளாகிய வள்ளியம்மையின் வரலாற்றினைக் கூறியருள வேண்டும்.' என்று கேட்டுக் கொண்டார். ''நீவிர் இருவரும் முற்பிறப்பில் திருமாலின் புதல்வியர். நம்மை மணம் செய்து கொள்ள விரும்பிப் பன்னிரண்டு ஆண்டுகள் தவம் புரிந்தீர்கள். அப்போது யாம் வந்து ஒருத்தி விண்ணிலும் மற்றவள் மண்ணிலும் பிறக்குமாறு அருள் புரிந்தோம். அதன்படி மூத்தவனாகிய நீ இந்திரன் மசனாகி எம்மை மணந்து கொண்டாய். நின் இளையாளாகிய

இவள் சிவ முனிவருக்கு மான் வயிற்றில் தோன்றி வள்ளிமலையில் நம்பிராசனால் எடுத்து வளர்க்கப்பட்டு, வள்ளி என்ற பெயருடன் புனங் காத்திருந்தாள். வேடர் குலத்தில் வளர்ந்த இவளிடம் நாம் சென்று பல மாயங்கள் புரிந்து மணந்தனம்'' என்றருளிச் செய்தார்.

தெய்வயானையம்மையார் மனம் மிக மகிழ்ந்து, 'வெகு நாட்களாகப் பிரிந்திருந்த என் இளையாளை என்னுடன் ஒன்று சேர்த்து வைத்த தேவரீர்க்கு என்ன கைம்மாறு செய்வேன்?'' என்று பணிந்தார். வள்ளியம்மை, தெய்வயானையை நோக்கி 'தேவி! முற்பிறப்பிலும் தங்கட்கு நான் தங்கையானேன; இப் பிறப்பிலும் தங்கையானேன். இனி யான் உய்வு பெற்றேன். என்னைக் காத்தருளும்' என்று பாத பங்கயத்தில் பணிந்தாள். தெய்வயானை அவரை அன்புடன் எடுத்துத் தழுவி இன்னுரை கூறினார்.

தேவியர் இருவருடன் தேவதேவன் வீற்றிருந்தருளினார். சேவலும் மயிலும் ஆடும் வேலும் வேறுளபடைக்கலங்களும் பெருமானுக்குரிய பணிகளைச் செய்து கொண்டு திருக்கோயில் முன்னும் அருகும் இருந்தன. வீரவாகு தேவர் முதலியோர் தத்தமக்குரிய ஏவல்களைச் செய்திருந்தனர். உலகமெல்லாம் எம்பிரானின் அருள் பரவியது.

கிரவுஞ்சமலையைப் பிளந்த வேலையுடைய முருகப் பெருமான் ஒரு கற்பக மரமாகி, கிரியாசக்தி, ஞானசக்தி என்ற இரு மனைவியர்கள் கிளைகளாகிச் சூழ எல்லா உயிர்களுக்கும் திரு அருளைப்பூத்து, பிறவியைக் காய்த்து கெடுத்து அடியார்களுக்கு முத்திக் கனியை எந்நாளும் வழங்கும்.

''கல்லகங் குடைந்த செவ்வேல் கந்தனோர் தருவதாகி
வல்லியர் கிரியை ஞான வல்லியின் கிளையாய்ச் சூழப்
பல்லுயிர்க் கருணை பூத்துப் பலநெறி காய்த்திட் டன்பர்
எல்லவர் தமக்கு முத்தி இருங்கனி உதவும் என்றும்''

### வாழ்த்து

''ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல்வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீர் அடியார் எல்லாம்.''

''புன்னெறி அதனிற் செல்லும் போக்கினை விலக்கிமேலாம்
நன்னெறி ஒழுகச் செய்துநவையறு காட்சிநல்கி
என்னையும் அடியன் ஆக்கி இருவினை நீக்கி யாண்ட
பன்னிரு தடந்தோள வள்ளல் பாதபங் கயங்கள் போற்றி.'

''வற்றா அருள்சேர் குமரேசன் வண்காதை தன்னைச்
சொற்றாரும் ஆராய்ந் திடுவாரும் துகளுறாமே
கற்றாரும் கற்பான் முயல்வாரும் கசிந்து கேட்கில்
உற்றாரும் வீடுநெறிப்பாலின் உறுவர் அன்றே''

கருணைத் திறத்தையே சிறப்பாகக் கொண்டது கந்தபுராணம். தேவர்கள் துயர் தீர்க்க வேண்டும் என்ற கருணையின் மீதே தோன்றியவர் கந்தப் பெருமான். தேவர்கள் துயர் தீர்த்ததோடு, தேவசத்துருவான சூரனிடமும் கருணை பொழிந்து அவனைத் தமது வாகனமும் துவசமுமாக்கி அருள்புரிந்தார். அதன் பின்னர் தமக்காகவே தவமிருந்த இரு நங்கையரைக் கருணை கூர்ந்து திருமணம் புரிந்து கொண்டருளினார். உலகெங்கும் அன்பும், பக்தியும் பெருகப் பல பதிகளிற் குடிகொண்டு இன்றும் தனிப்பெருங் கருணை நாயகனாக விளங்குகிறார்.

( கந்தவேள் கருணை முற்றிற்று )

## மயிலை நினை

குயிலைப் போன்று கருமை நிறம் கொண்டதாய் விளங்கும் தலைமுடி, கொக்கைப் போல் நரையுண்டாகி வெளுப்படையா முன்னமே, திருமயிலையில் எழுந்தருளியுள்ள அருள்மிகு கபாலீசுவரரை வணங்கிப் பிறவிப் பயனாகிய வீடுபேற்றினைப் பெறவேண்டும் என்று கூறுகிறது காடவர்கோன் பாடிய சேத்திர வெண்பாவிலுள்ளகீழ்க்காணும் பாடல்:

குயிலொத் திருள்குஞ்சி கொக்கொத் திருமல்
பயிலப் புகாமுன்னம் நெஞ்சே — மயிலை
திருப்புன்னை யங்கானல் சிந்தியா யாகில்
இருப்பின்னை அங்காந் திளைத்து''

# கீதைக் குறள்கள்

**அறநெறியண்ணல் கி.பழநியப்பனார்**

**உத்தமநாதன்**

**(புருஷோத்தம யோகம்)**

வேர்மேலும் பல்கிளைகள் கீழும் விரிவுடை
ஓர்தலை கீழ்மரம் உண்டு (15[1)

ஆன்றவே தங்களே அம்மரத் தின்இலைகள்;
சான்றோர் அதைஅரசென் பர் ( ,, )

அதுவேமுக் குணங்கள் தளிர்க்கும் அரசு;
அதுதரும் கர்மவினை கள்; (15[2)

ஆங்கது ஆதியந்தம் அற்றது; திண்மையாய்
ஓங்கியது; பார்த்தல் அரிது. (15[3)

பற்றின்மை என்பதோர் கோடரி பற்றியதைச்
செற்றிடின் வெற்றிகிட் டும் ( ,, )

பிறப்பிலா பிர்மநிலை பெற்றோரின் சக்தி
பிறப்பிட த்தைச் சார்ந்தோன் நான் (15[14).

கர்வம் மயக்கம் கடிந்தவர் பற்றற்ற
நிர்விகற்ப நற்பதம்சேர் வர் (15[5)

என்பதத்தில் ஞாயிறு திங்கள் எரிகிடையா;
சென்றடைந்தோர் இங்குதிரும் பார் (15[6)

எனதுபல் அம்சமே எண்ணற்ற ஆன்மாவாய்
மனமும் புலனும் பெறும் (15[7)

காற்று.தான் தீண்டும் மலரின் கடிமணத்தை
ஏற்றுச்செல் லல்போன்ற தாம் (15[8)

உடலை உதறிஆன் மாசெல்கை யில் நுண்
உடலை ஏற்றுச்செல் லல் ( ,, )

மெய்வாய் விழிசெவி மூக்குமனம் என்பனவால்
துய்த்திடுவர் இன்பதுன்பங் கள் (15[9)

அறிவிலார் சற்றும் இதனை அறியார்
அறிந்திட நல் ஞானம்வேண்டும் (15[10)

அறிவிலார் காணார் முயன்றும்; அறிஞர்
அறிவார் தெளிவாய் அதை. (15[11)

தீ, திங்கள் ஞாயிறு திக்கெல்லாம் வீசொளி
ஆதியில்லா நானேயா வேன். (15[12)

உலகத்தி னுள்புகுந்து என்சக்தி யால்பற்
பலஉயிரி னைத்தாங்கு வேன். (15[13)

திங்களின் சக்தியாய்த் தாவரங்கள்
எங்கும் வளரச்செய் வேன். ( ,, )

அக்கினியாய்ச் சென்று பிராண அபானவாய்
வுக்களுடன் ஒன்றிக் கலந்து, (15[14)

உண்ணும் உணவெலாம் நன்றாகச் சீரணிக்கப்
பண்ணுவோ னும்நானே யாம் ( ,, )

எல்லோர் இதயத்தி லுள்புகுவேன்; ஞாபகம்
நல்லறிவும் அஃதின்மை யும், (15[15)

தோன்றுவது என்னிடமே; தொல்வேத
மும் மற்றும்
ஆன்றவே தாந்தமும்தந் தேன், ( ,, )

அழிவது யாக்கையே என்ப தறிக;
அழிவற்ற தொன்றாம் உயிர் (15[16)

இவற்றிற்கு வேறாகும் எங்குமுள நானே
அவனியெல்லாம் தாங்குப வன் (15[17)

அழிவும் அழியாமை யும்கடந்தோன், என்றும்
பழிப்பிலா உண்மை அறிந்து (15[18)

உலகமும் வேதமும் ஒக்கஎனைப் போற்றும்
நலம்தரும் உத்தமன் என்று ( ,, )

உத்தம நாதன்நான் என்ப துணர்ந்தோர்
சித்தம் தெளிந்தவ ராம். (15[19)

அரியஇவ் வுண்மை அறிந்தோரை என்றும்
உரிமையுடன் காப்பேன் இனிது (15[20)

—(தொடரும்)

# "ஏரகப்பொருப்பிற் பூத்த பெருமாள்"

கோயிற் கலைச் செல்வர்
தி. இராசமாணிக்கம், பி.காம்..

ஆறுமாமுகனின் ஆறுபடை வீடுகளில் நான்காவது படைவீடான திருவேரகம் எந்தத் தலத்தைக் குறிக்கிறது என்பது பற்றி கருத்து வேறுபாடுகள் உள்ளன.

நச்சனார்க்கினியார் இதை ''மலை நாட்டகத்து ஒரு திருப்பதி'' எனக் குறிப்பிட, சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர் வெண் குன்றை சுவாமிமலை எனக் கூறுவதால், ஏரகம் சுவாமிமலை அல்லாத மற்றொரு தலம் என அவர் கருதுவதாகத் தெரிகிறது.

முருகப்பெருமானது அன்பர்களில் தலை சிறந்தவரான அருணகிரிநாதர் ''குடகாவிரிக்கு வடபாலோர் திருவேரகத்தில் உறைவாய்'' என்றும், 'காவிரிபுறம்பு சுற்றும் ஏரகம் அமர்ந்த பச்சை மயில்வீரா' என்றும் அருளியதினின்றும் திருவேரகம் என்ற திருத்தலம் காவிரியாற்றின் கரையில் உள்ளது என்பதாகிறது. மேலும் அவா 'கோமள வெற்பினை ஒத்த' என்றும் 'வார் குழலைச் சொருகி'' எனத் தொடங்கும் திருப்புகழ்களில்

''ஏரக வெற்பு எனும் அற்புதமிக்க
சுவாமிமலைப்பதி''

என அருளியதன் மூலம் சுவாமிமலைதான் திருவேரகம் எனச் சற்றும் ஐயமின்றி உறுதிப் படுத்தி விட்டார். இருப்பினும் திருவேரகம் என்ற தலத்திற்கு உரிமை கொண்டாடும் திருத்தலம் ஒன்று நாகர்கோயில் மாவட்டத்தில் உள்ளது. அது குமாரர் கோயில் என்பதாகும். இது நச்சினார்க்கினியார் கூறியதற்கு ஏற்ப உள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

நாகர்கோயிலினின்றும் திருவனந்தபுரம் செல்லும் நெடுஞ்சாலையில் உள்ள தென்கரை என்ற சிற்றூரினின்றும் ஏறத்தாழ 3 கிலோ மீட்டர் தொலைவில் குமாரர் கோயில் என்ற திருத்தலம் உள்ளது. ஓங்கி உயர்ந்த மலைகள் பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்ற பசுமையான வயல்கள் இத்தகைய இயற்கை எழில்களுக்கு இடையில் இந்தக்கோயில் அமைந்துள்ளது.

30 படிகள் ஏறிச் சென்றால், திருக்கோயிலின் திருவாயிலை அடையலாம். கருவறை, அர்த்தமண்டபம், முன்மண்டபம், திருச்சுற்று ஆகியவற்றைக் கொண்டது கோயில், முன் மண்டப வாயிலுக்கு தென்புறமாக உள்ள விநாயகர் கல்யாண விநாயகர் என்று அழைக்கப் பெறுகிறார். இவர் யானை உருவில் சென்று முருகன் வள்ளி திருமணம் நடைபெறக் காரணமாக இருந்தமையால், இப்பெயர்பெற்றதாக கூறப்படுகிறது. கோயிலை யொட்டிய வேளிமலையில் இரண்டரை கிலோ மீட்டர் தூரம் சென்றால் கல்யாண மண்டபத்தை அடையலாம். அங்கிருந்து அரை கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள சுனை வள்ளி சுனை எனப்படுகிறது. வள்ளிசுனையினின்றும் அரை கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சோலை, வள்ளி சோலை என்று அழைக்கப் பெறுகிறது. அந்தச் சோலையில் வள்ளியம்மை வளர்ந்ததாக நம்பப்படுகிறது. கிழவன் சோலை என்பது அங்கிருந்து அரை கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இங்கு முருகப் பெருமான் கிழவனாக வள்ளியைச் சந்தித்ததாகப் போற்றப்படுகிறது.

மலை மேலே உள்ள கல்யாண மண்டபத்தில் பங்குனி மாதத்தில் அனுசநட்சத்திரத்தில் முருகன் வள்ளியம்மை திருமணத் திருவிழா ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெற்று வருகிறது வேடமடந்தையை வேலவன் கவர்ந்து சென்றதை அறிந்த வேட்டுவ அரசனாகிய நம்பியும், ஏனைய வேடர்களும் போர்க்கோலம் பூண்டு அவர்கள் இருவரும் தங்கி இருந்த சோலையே வளைத்துப் போர் செய்தனர் எனக் கந்தபுராணம் கூறுகிறது

''கானவர் பலருங் கூடிப்
பொன்னெனச் சிலைக்கோல் பற்றிப் போர்த்
தொழிற்கு அமைந்து போனார்' (6-24—174)
'சீறி வெய்து உயிர்த்துப்
பொங்கி
மறத்தொழில் பொழிற் காவை மருங்குற
வளைந்து கொண்டார்'' (6—26—179)

இதற்கு ஏற்ப இங்கு இவ்விழாவின் போது, உற்சவராகிய முருகப்பெருமானுடன் இங்கு வாழும் வேடர்கள் போர்புரியும் காட்சியும் நடைபெறுகிறது. இந்தத்தலத்தின் தலமரம் வேங்கை மரமாம் முருகன் வேட மங்கைக்காக வேங்கைமரமானான் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவையேயன்றி, முன் மண்டபத்தின் முகப்பில், ஆறுமுகன் வள்ளி திருமணக்காட்சி காணப்படுகிறது இவற்றின் அடிப்படையில் இங்குதான் முருகன் வேடமடந்தையைத் திருமணம் புரிந்தான் என வலியுறுத்தப்படுகிறது.

இங்கு எழுந்தருளியுள்ள மூலவரின் திருப்பெயர், வேலாயுதப் பெருமான் என்பதாகும். வல்லக்கோட்டை ,சென்னை மாநகரின் ஒருபகுதியான வலசரப்பாக்கம், வாலி கொண்டபுரம் ஆகிய இடங்களில உள்ள முருகனதுதுயரம்ஏறத்தாழஆறரைஅடி. ஆனால் இங்குள்ள மூலவரின் உயரம் சுமார் எட்டே முக்கால் அடியாகும். 'நெடியவன் மனமகிழ் முருகோனே'' என்பது அருணகிரி வள்ளலின் திருவாக்காம். கொடியோனின் மருகோனும் நெடியோனாக உள்ளது வியப்பல்லவா! இவனது தலையை கிரீட மகுடம் அலங்கரிக்க இவனது இரு கைகளில் வலக்கை வரத முத்திரையிலும், இடக்கை கத்ய வலம்பித முத்திரையிலும் உள்ளன. ஆகமங்களில் இருகைகள் கொண்ட முருகனது திருவுருவை ஐந்து வகைகளாக அமைக்கலாம் எனச் சொல்லப்பட்டுள்ளது. அதில் இதுவும் ஒன்று. இவனுக்கு இடப்பக்கமாக, உள்ள வேடமங்கையின் உயரம் ஏறத்தாழ ஏழேமுக்கால் அடியாகும். அவளது இருகைகளில் வலக்கையில் தாமரை மலர் இருக்க, இடக்கை கத்ய வலம்பித முத்திரையில் உள்ளது.

# இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை சுற்றறிக்கை

அனுப்புநர்
திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப.,
ஆணையர்,
சென்னை-34.

பெறுநர்
அனைத்து துணை ஆணையர்கள் (
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

ந.க. எண். 73390[92 ஐ1 நாள் 26-4-93

ஐயா,

பொருள் : ஓய்வூதியம்—இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வேத பாராயணம், நாலாயிரம் திவ்ய பிரபந்தம் பாடுபவர்கள் மற்றும் அரையர் சேவை செய்பவர்கள் (தமிழ்நாடு ஓய்வுதியம் வழங்குவதற்கான திட்டம் செயல்படுத்துவது—குறித்து

பார்வை :—1. அரசாணை எண். 512, வணிகவரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 18-12-1991.
2. அரசாணை எண். 78, வணிக வரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 24-2-1992
3 அரசாணை நிலை, எண் 231, வணிகவரி மற்றும் அற நிலையத்துறை, நாள் 23-6-1992.

தமிழ்நாட்டு திருக்கோயில்களில் கால பூஜை நேரங்களில் பாண்டியத்துவம் பெற்ற வேத ஆகம விற்பன்னர்கள், வேத ஆகமங்களை ஓதுவதும், திருக்கோயில் சம்பந்தப்பட்ட ஓமங்கள் மற்றும் கும்பாபிஷேகங்கள் ஆகியவைகளை முன்னின்று நடத்தக்கூடிய திறமை வாய்ந்த பெரியோர்கள் நாளுக்கு நாள் குறைந்து வருவதைக் கருததிற்கொண்டு அத்தகைய பணியை உருவாக்கும் முகத்தான திருக்கோயில்களில் வேத ஆகமங்களை ஓதியவர்களுக்கும், வைஷ்ணவ திருக்கோயில்களில் நாலாயிரம் திவ்யபிரபந்தங்களை சாத்துமுறை செய்த பெரியோர்களுக்கும் அரையர் சேவை செய்த பெரியோர்களுக்கும், ஓய்வூதியம் வழங்குவதற்கான திட்டத்திற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியத் தொகை மாதம் ரூ. 300 வீதம் வழங்கவும், இந்த ஓய்வூதியம் பெற தகுதி வாய்ந்தவர்கள் திருக்கோயில்களில் 20 ஆண்டு காலத்திற்கு குறைவில்லாமல் பணிபுரிந்து இருக்க வேண்டும்.. அதற்குத் தேவையான செயல் திட்ட விதிமுறைகளையும் அரசு அங்கீகரித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் 100 நபர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது. இந்த ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பயன்பெறக் கூடிய நபர்களை துணை ஆணையர் வாரியாக கீழ்க்கண்ட எண்ணிக்கையின்படி பரிசீலிக்க முடிவு செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | சென்னை துணை ஆணையர் பிரிவு | 5 |
| 2. | வேலூர் துணை ஆணையர் பிரிவு | 5 |
| 3. | சேலம் துணை ஆணையர் பிரிவு | 5 |
| 4. | கோவை துணை ஆணையர் பிரிவு | 5 |
| 5. | திருச்சி துணை ஆணையர் பிரிவு | 10 |
| 6. | மயிலாடுதுறை துணை ஆணையர் பிரிவு | 15 |
| 7. | தஞ்சாவூர் துணை ஆணையர் பிரிவு | 25 |
| 8. | மதுரை துணை ஆணையர் பிரிவு | 5 |
| 9. | சிவகங்கை துணை ஆணையர் பிரிவு | 10 |
| 10. | திருநெல்வேலி துணை ஆணையர் பிரிவு | 15 |

இதில் தகுதி வாய்ந்த நபர்கள் மேலே கண்ட பிரிவுகளில் இல்லையென்றால் தகுதி வாய்ந்த நபர்கள் அடுத்த பிரிவுகளிலுள்ள இடத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்படும். எனவே, துணை ஆணையர்கள் தங்களது சரகத்திற்குட்பட்ட உதவி ஆணையர்கள் மூலம் இந்த ஓய்வூதியத் திட்டம் செயல்படுவதற்கான தகுதிவாய்ந்த நபர்களிடம் மனுக்களைப் பெற்று ஒவ்வொரு மாவட்ட நிர்வாகக் குழுத் தலைவர் பரிந்துரையின் பேரில் மாநில தேர்வு குழுவுக்கு பரிந்துரைத்து அனுப்ப கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்த ஓய்வூதியத் திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட்ட வேண்டியுள்ளதால் இதில் தனிக்கவனம் செலுத்தி, தங்களது பிரிவில் இந்த ஓய்வூதியத் திட்டத்தினைப் பயன்பெறக்கூடிய வகையில் திருக்கோயில்கள் மூலம் தகுந்த விளம்பரங்களைத் தங்களது சரகத்தில் செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தேவையான விண்ணப்ப படிவங்கள இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. அந்த படிவங்களை மனுதாரர்கள் பூர்த்தி செய்து உரிய சான்றுகள் மற்றும் பாஸ்போர்ட் சைஸ் போட்டோ ஆகியவைகளுடன் உதவி ஆணையர் அல்லது துணை ஆணையர் மூலம் மாவட்டக் குழுத்தலைவரின பரிந்துரை பெற்று விரைவில் அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இக்குறிப்பு பெற்றமைக்கு ஒப்புதல் அனுப்பி வைக்க அனைத்து துணை ஆணையர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஒம்.) சி. கே. கரியாலி, இ.ஆ.ப.
ஆணையர்

உண்மை நகல்[உத்தரவுபடி

# மழை பொழிவிக்கும்
# வள்ளல் திருப்பதிகங்கள்

(இப்பதிகங்களைப் பாடவானம் மும்மாரி பொழிந்து வளமிகத் தழைத்து நம் நாடு பொன்னாடாய் மிளிரும்)

## 3. திருமுதுகுன்றம்

மெய்த்தாறு சுவையு மேழிசையுமெண்
குணங்களும் விரும்பு நால்வே
தத்தாலுமறி வொண்ணா நடைதெளிய
பளிங்கே போலரிவை பாகம்
ஒத்தாறு சமயங்கட் கொரு தலைவன்
கருதுமூர் உலவு தெண்ணீர்
முத்தாறு வெதிருதிர நித்திலம் வாரிக்
கொழிக்கு முதுகுன்றமே.

வேரிமிகு குழலியொடு வேடுவனாய்
வெங்கானில் விசயன்மேவு
போரினமிகு பொறையளந்து பாசுபதம்
புரிந்தளித்த புராணர்கோயில்
காரின்மலி கடிபொழில்கள் கனிகள்பல
மலருதிர்த்துக் கயமுயங்கி
மூரிவளங் கிளர்தென்ற றிருமுன்றிற்
புகுந்துலவு முதுகுன்றமே. 2

தக்கனது பெருவேள்விச்சந்திரனிந்
திரனெச்ச னருக்கனங்கி
மிக்கவிதா தாவினொடும் விதிவழியே
தண்டித்த விமலர்கோயில்
கொக்கினிய கொழும்வருக்கை கதலிகமு
குயர்தெங்கின் குவைகொள்சோலை
முக்கனியின் சாறொழுகிச் சேறுலரா
நீள்வயல்சூழ் முதுகுன்றமே. 3

வெம்மைமிகு புரவாணர் மிகைசெய்ய
விறலழிந்து விண்ணுளோர்கள்
செம்மலரோன் இந்திரன்மால் சென்றிரப்பத்
தேவர்களே தேரதாக
மைம்மருவு மேருவிலு மாகணநா
ணரியெரிகால் வாளியாக
மும்மதிலு நொடியளவிற் பொடிசெய்த
முதல்வனிட முதுகுன்றமே. 4

இழைமேவு கலையல்குல் ஏந்திழையா
ளொருபாலா யொருபாலெள்கா
துழைமேவ உரியுடுத்த வொருவனிருப்
பட மெய்ப ருப்பரோங்கு
கழைமேவு மட மந்தி மழைகண்டு
மகவினொடும் புகவொண்கல்லின்
முழைமேவு மால்யானை யிரைதேரும்
வளர்சாரன்முதுகுன்றமே. 5

நகையார்வெண் டலைமாலை முடிக்கணிந்த
நாதனிட நன்முத்தாறு
வகையாரும் வரைப்பண்டங் கொண்டிரண்டு
கரையருகு மறியமோதித்
தகையாரும் வரம்பிடறிச் சாலிகமு
நீர்குவளை சாயப்பாய்ந்து
முகையார்செந் தாமரைகண்முகமலர
வயறழுவு முதுகுன்றமே. 6

அறங்கிளரு நாலவேத டாலின்கீழ்
இருந்தருளி யமரர்வேண்ட
நிறங்கிளர்செந்தாமரையோன் சிரமைந்தின்
ஒன்றறுத்த நிமலர்கோயில்
திறங்கொண்மணித்தரளங்கள் வரத்திரண்டங்
கெழிற்குறவர் சிறுமியார்கள்
முறங்களினாற் கொழித்துமணி செலவிலக்கி
முத்துலைப்பெய் முதுகுன்றமே. 7

கதிரொளிய நெடுமுடிபத் துடையகடல்
இலங்கையர்கோன் கண்ணும்வாயும்
பிதிரொளிய கனல்பிறங்கப் பொங்கயிலை
மலையைநிலை பெயர்த்தஞான்று
மதிவளைகக் கிறைமுரல மலரடியொன்று
ஊன்றிமறை பாடவாங்கே
முதிரொளிய சுடர்நெடுவான் முன்னீந்தான்
வாய்ந்தபதி முதுகுன்றமே. 8

பூவார்பொற் றவிசின்மிசை யிருந்தவனும்
பூந்துழாய் புனைந்தமாலும்
ஓவாது கழுகேன மாயுயர்ந்தாழ்ந்
துறநாடி யுண்மைகாணாத்
தேவாருந் திருவுருவன் சேருமலை
செழுநிலைத்தை மூடவந்த
மூவாத முழங்கொலிநீர் கீழ்தாழ
மெலுயர்ந்த முதுகுன்றமே. 9

மேனியிற்சீ வரத்தாரும் விரிதருதட்
டுடையாரும் விரவலாகா
ஊனிகளாவுள்ளார் சொற் கொள்ளாது
முள்ளுணர்ந்தங் குய்மின்தொண்டீர்
ஞானிகளா யுள்ளார்கள் நான்மறையை
முழுதுணர்ந்தைம் புலன்கள்செற்று
மானிகளாய் முனிச்செல்வர் தனித்திருந்து
வேம்புரியு முதுகுன்றமே. 10

முழங்கொலிநீர் முத்தாறு வலஞ்செய்ய
முதுகுன்றத் திறையை மூவாப்
பழங்கிழமைப் பன்னிருபேர் படைத்துடைய
கழுமலமே பதியாக் கொண்டு
தழங்கெரிமுன் றோம்புதொழிற் றமிழ்ஞான
சம்பந்தன் சமைத்தபாடல்
வழங்குமிசை கூடும்வகை பாடுமவர்
நீடுலக மாள்வர்தாமே. 11

## 4. திருவீழிமிழலை

ஏரிசையும் வடவாலின் கீழிருந்தங்
கீரிருவர்க் கிரங்கிநின்று
நேரியநான் மறைப்பொருளை
யுரைத்தொளிசேர்
நெறியளித்தோ னின்றகோயில்
பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும்
பயின்றோது மோசைகேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள்
பொருட்சொல்லு மிழலையாமே. 1

பொறியரவ மதுசுற்றிப் பொருப்பேமத்
தாகப்புத் தேளிர்கூடி
மறிகடலைக் கடைந்திட்ட விடமுண்ட
கண்டத்தோன் மன்னுங்கோயில்
செறியிதழ்த்தா மரைத்தவிசிற் றிகழ்ந்தோங்கு
மிலைக்குடைக்கீழ்ச் செய்யார்செந்நெல்
வெறிகதிர்ச்சா மரையிரட்ட விளவன்னம்
வீற்றிருக்கு மிழலையாமே. 2

எழுந்துலகை நலிந்துழலு மவுணர்கள்தம்
புரமூன்று மெழிற்கணாடி
உழுந்துருளு மளவையினொள் ளெரிகொளவெஞ்
சிலைவளைத்தோன் உறையுங்கோயில்
கொழுந்தரள நகைகாட்டக் கோகனக
முகங்காட்டக் குதித்துநீர்மேல்
விழுந்தகயல் விழிகாட்ட விற்பவளம்
வாய்க்காட்டு மிழலையாமே. 3

உரைசேரு மெண்பத்து நான்குநூ
றாயிரமாம் யோனிபேதம்
நிரைசேரப் படைத்தவற்றி னுயிர்க்குயிராய்
அங்கங்கே நின்றான்கோயில்
வரைசேரு முகின்முழவ மயில்கள்பல
நடமாட வண்டுபாட
விரைசேர்பொன் னிதழிதர மென்காந்தள்
கையேற்கு மிழலையாமே. 4

காணுமா றரியபெரு மானாகிக்
காலமாய்க் குணங்கண்மூன்றாய்ப்
பேணுமூன் றுருவாகிப் பேருலகம்
படைத்தளிக்கு பெருமான்கோயில்
தாணுவாய் நின்றபர தத்துவனை
யுத்தமனை யிறைஞ்சீரென்று
வேணுவார் கொடிவிண்ணோர் தமைவிளிப்ப
போலோங்கு மிழலையாமே. 5

அகனமர்ந்த வன்பினரா யறுபகைசெற்
றைம்புலனு மடக்கிஞானம்
புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத்
துள்ளிருக்கும் புராணர்கோயில்
தகவுடை நீர் மணித்தலத்துச் சங்குளவர்க்
கந்திசழச் சலசத்தியுள்
மிகவுடைய புன்குமலர் பொரியட்ட
மணஞ்செய்யு மிழலையாமே. 6

ஆறாடு சடைமுடியன் அனலாடு
மலர்க்கையன் இமயப்பாவை
கூறாடு திருவுருவன் கூத்தாம்
குணமுடையோன் குளிருங்கோயில்
சேறாடு செங்கழுநீர்த் தாதாடி
மதுவுண்டு சிவந்தவண்டு
வேறாய வுருவாகிச் செவ்வழிநற்
பண்பாடு மிழலையாமே.

கருப்பமிகு முடலடர்த்துக் காலூன்றிக்
கைமறித்துக் கயிலையென்னும்
பொருப்பெடுக்க லுறுமரக்கன் பொன்முடி
தோள்
நெரித்தவிரற் புனிதர்கோயில்
தருப்பமிகு சலந்தரன்றன் உடல்தடிந்த
சக்கரத்தை வேண்டியீண்டு
விருப்பமொடுமால் வழிபாடு செய்யவிழி
விமானஞ்சேர் மிழலையாமே.

செந்தளிர்மா மலரோனுந் திருமாலும்
ஏனமோ டன்னமாகி
அந்தமடி காணாதே யவரேத்த
வெளிப்பட்டோ னமருங்கோயில
புத்தியினான் மறைவழியே புற்பரப்பி
நெய்சமிதை கையிற்கொண்டு
வெந்தழலின் வேட்டுலகின் மிகவளிப்போர்
சேருமூர் மிழலையாமே.

எண்ணிறந்த அமணர்களு மிழிதொழில்சேர்
சாக்கியரு மென்றுந் தன்னை
நண்ணரிய வகைமயக்கித் தன்னடியார்க்
கருள்புரியுநாதன்கோயில்
பண்ணமரு மென்மொழியார் பாலகரைப்
பாராட்டு மோசைகேட்டு
விண்ணவர்கள் வியப்பெய்தி விமானத்தோ
டும்இழியு மிழலையாமே. 10

மின்னியலு மணிமாட மிடைவீழி
மிழலையான் விரையார்பாதம்
சென்னிமிசைக் கொண்டொழுகுஞ் சிரபுரக்
கோன்
செழுமறைகள் பயிலுநாவன்
பன்னியசீர் மிகுஞான சம்பந்தன்
பரிந்துரைத்த பத்துமேத்தி
இன்னிசையாற் பாடவல்லார் இருநிலத்தில்
ஈசனெனு மியல்பினோரே.

## 5. திருக்கச்சியேகம்பம்

வெந்தவெண் பொடிப்பூசு மார்பின்விரி
நூலொருபால் பொருந்தக்
கந்தமல்கு குழலியோடுங் கடிபொழிற்கச்சி
தன்னுள்
அந்தமில் குணத்தா ரவர்போற்ற
அணங்கினொ டாடல்புரி
எந்தைமேவிய வேகம்பந் தொழுதேத்த
இடர்கெடுமே. 1

வரந்திகழு மவுணர் மாநகர்மூன்றுடன்
மாய்ந்தவியச்
சரந்துரந்தெரிசெய்த தாழ்சடைச் சங்கரன்
மேயவிடம்
குருந்த மல்லிகை கோங்குமா தவிநல்ல
குராமரவம்
திருந்துபைம் பொழிற்கச்சி யேகம்பஞ்
சேரவிடர்கெடுமே. 2

வண்ணவெண் பொடிப்பூசு மார்பின் வரியர வம்புனைந்து
பெண்ணமர்ந் தெரியாடல் பேணியபிஞ்ஞகன் மேயவிடம்
விண்ணமர் நெடுமாட மோங்கி விளங்கிய கச்சிதன்னுள்
திண்ணமாம் பொழில்சூழ்ந்த வேகம்பஞ் சேர விடர்கெடுமே.

தோலு நூலுந்துதைந்த வரைமார்பிற் சுடலை வெண்ணீறணிந்து
காலன்மாள வுறக்காலாற் காய்ந்த கடவுள் கருதுமிடம்
மாலைவெண் மதிதோயுமாமதிற் கச்சிமாநகருள்
ஏலநாறிய சோலைசூ ழேகம்ப மேத்த விடர்கெடுமே 4

தோடணிம் மலர்க்கொன்றை சேர்சடைத் தூமதி யம்புனைந்து
பாடனான் மறையாகப் பல்கணப் பேய்களவைசூழ
வாடல்வெண்ட லையோட னலேந்தி மகிழ்ந்துடன் ஆடல்புரி
சேடர்சேர் கலிக்கச்சி யேகம்பஞ் சேரவிடர்கெடுமே 5

சாகம்பொன் வரையாகத்தானவர் மும்மதில் சாயவெய்து
ஆகம்பெண் ணொருபாக மாக வரனொடு நூலணிந்து
மாகந்தோய் மணிமாட மாமதிற் கச்சி மாநகருள்
ஏகம்பத்துறையீசன் சேவடி யேத்த விடர் கெடுமே. 6

(ஏழாம் பாடல்கிடைக்கவில்லை.)

வாணிலா மதிபுல்கு செஞ்சடை வாளரவம் அணிந்து
நாணிடத்தினில் வாழ்க்கை பேணி நகுதலையிற் பலிதேர்ந்
தேணிலா வரக்கன் நீண்முடி பத்து மிறுத்தவனூர்
சேணுலாம் பொழிற்கச்சி யேகம்பஞ் சேர விடர்கெடுமே 8

பிரமனுந் திருமாலுங் கைதொழப் பேரழலாயபெம்மான்
அரவஞ் சேர்சடை யந்தண னணங்கினொடு அமருமிடம்
கரவில்வண் கையினார்கள் வாழ்கலிக் கச்சி மாநகருள்
மரவஞ்சூழ் பொழிலேகம் பந்தொழ வல்வினை மாய்ந்தறுமே. 9

குண்டுபட் டமணா யவரொடுங் கூறைதம் மெய்போர்க்கும்
மிண்டர் கட்டிய கட்டுரை யவைகொண்டு விரும்பேன்மின்
விண்டவர் புரமூன்றும் வெங்கணை ஒன்றினா லவியக்
கண்டனன் கலிக்கச்சி யேகம்பங் காணவிடர் கெடுமே 10

ஏரினார் பொழில்சூழ்ந்த கச்சி யேகம்பமேயவனைக்
காரினார் மணிமாட மோங்கு கழுமல நன்னகருள்
பாரினார் தமிழ்ஞான சம்பந்தன் பரவிய பத்தும்வல்லார்
சீரினார் புகழோங்கி விண்ணவ ரோடுஞ் சேர்பவரே 11

## 6. திருப்பரியலூர் வீரட்டம்

கருத்தன் கடவுள் கனலேந் தியாடும்
நிருத்தன் சடைமே ரம்பா மதியனின்
திருத்த முடையார் திருப்பறி யலூரில்
விருத்தனெ னத்தகும் வீரட்டத்தானே.......1

மருந்த னமுதன் மயானத்துண்மைந்தன்
பெருந்தண் புனற்சென்னி வைத்த பெருமான்
திருந்து மறையோர் திருப்பறி யலூரில்
விரிந்த மலர்ச்சோலை வீரட்டத்தானே... 2

குளிர்ந்தார் சடையன் கொடுஞ்சிலை விற்காமன்
விளிந்தான் அடங்க வீந்தெய்தச் செற்றான்
தெளிந்தார் மறையோர் திருப்பறி யலூரில்
மிளிர்ந்தார் மலர்ச்சோலை வீரட்டத்தானே 3

பிறப்ப தி யில்லான் பிறப்பார் பிறப்புச்
செறப்பா தி யந்தஞ் செலச்செய்யுந் தேசன்
சிறப்பா டுடையார் திருப்பறி யலூரில்
விறற்பா ரிடஞ்சூழ வீரட்டத் தானே 4

கரிந்தா ரிடுகாட்டில் ஆடுங்க பாலி
புரிந்தார் படுதம் புறங்காட் டிலாயடும்
தெரிந்தார் மறையோர் திருப்பறியலூரில் 5
விரிந்தார் மலர்ச்சோலை வீரட்டத்தானே

அரவுற்ற நாணா வனலம்ப தாகச்
செருவுற் றவர்புரந் தீயெழச் செற்றான்
தெருவிற் கொடிசூழ் திருப்பறி யலூரில்
வெருவுற் றவர்தொழும் வீரட்டத்தானே 6

நரையார் விடையான லங்கொள் பெருமான்
அரையா ரரவம் மழகா வசைத்தான
திரையார் புனல்சூழ் திருப்பறி யலூரில்
விரையார் மலர்ச்சோலை வீரட்டத் தானே 7

வளைக்கும் மெயிற்றின் அரக்கன் வரைக்கீழ்
இளைக்கும் படிதா னிருந்தேழை யன்னம்
திளைக்கும் படுகர்த் திருப்பறி யலூரில்
விளைக்கும் வயல்சூழ்ந்த வீரட்டத் தானே 8

விளங்கொண் மலர்மே லயனோத வண்ணன்
துளங்குப் மனத்தார் தொழத்தழ லாய்நின்றான்
இளங்கொம் பனாளோ டிணைந்தும் பிணைந்தும்
விளங்குந் திருப்பறியல் வீரட்டத்தானே 9

சடையன் பிறையன் சமண்சாக்கியரோடு
அடையன் பிலாதார் அடியார் பெருமான்
உடையன் புலியின் உரிதோ லரைமேல்
விடையன் திருப்பறியல் வீரட்டத் தானே 10

நறுநீ ’நகுங்காழி ஞானசம்பந்தன்
வெறிநீர்த் திருப்பறியல் வீரட்டத் தானை
பொறிநீ டரவன் புனைபாடல் வல்லார்க்
கறுநீ டவலம் அறும் பிறப்புத் தானே

## 7. திருப்பராய்த் துறை

நீறுசேர்வதொர் மேனியர் நேரிழை
கூறுசேர்வதோர் கோலமாய்ப்
பாறுசேர்தலைக் கையர்பராய்த்துறை
ஆறுசேர்சடை யண்ணலே. 1

கந்தமாமலர்க் கொன்றைகமழ்சடை
வந்தபூம்புனல் வைத்தவர்
பைந்தண்மாதவி சூழ்ந்தபராய்த்துறை
அந்தமில்ல வடிகளே. 2

வேதர்வேதமெல் லாமுறையால விரித்
தோதநின்ற வொருவனார்
பாதிபெண்ணுரு வாவர்பராய்த்துறை
ஆதியாயவடிகளே. 3

தோலுஞ்சம்மரை யாடைசுடர்விடு
நூலுந்தாமணி மார்பினர்
பாலுநெய்பயின் றாடுபராய்த்துறை
ஆலநீழ வடிகளே. 4

விரவி நீறுமெய் பூசுவர்மேனிமேல்
இரவினின்றெரி யாடுவர்
பரவினாரவர் வேதம்பராய்த்துறை
அரவமார்த்த வடிகளே 5

மறையுமோதுவர் மான்மறிக்கையினர்
கறைகொள்கண்ட மடையவர்
பறையுஞ்சங்கு மொலிசெய்பராய்த்துறை
அறையநின்றவடிகளே 6


விடையுமேறுவர் வெண்பொடிப்பூசுவர்
சடையிற்கங்கை தரித்தவர்
படைகொள்வெண்மழு வாளர்பராய்த்துறை
அடையநின்ற வடிகளே 7

தருக்கின்மிக்க தசக்கிரிவன்றனை
நெருக்கினார்விர லொன்றினால்
பருக்கினாரவர் போலும்பராய்த்துறை
அருக்கன்றன்னை யடிகளே 8

நாற்றமாமல ரானொடுமாலுமாய்த்
தோற்றமும்அறி யாதவர்
பாற்றினார்வினை யானபராய்த்துறை
ஆற்றின்மிக்கவடிகளே 9

திருவிலிச்சில தேர்மணாதர்கள்
உருவிலாவுரை கொள்ளேலும்
பருவிலாலெயி லெய்துபராய்த்துறை
மருவினான்றனை வாழ்த்துமே 10

செல்வமல்கிய செல்வர்பராய்த்துறைச்
செல்வர்மேற்சிதை யாதன
செல்வன்ஞானசம் பந்தனசெந்தமிழ்
செல்வமாமிவை செப்பவே. 11



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் நடைபெற்ற மீனாட்சித் திருக்கல்யாண வைபவத்தில் அறநிலையத்துறை ஆணையாளர் திருமதி சி. கே, கரியாலி, இ.ஆ.ப. அவர்கள் கலந்து கொண்டார்கள்



# ஒரு கால பூஜைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களின் உதவி

நலிவுற்ற திருக்கோவில்களில் ஒரு கால பூஜையாவது நடக்க வேண்டும் என தமிழக முதல்வர் டாக்டர் **ஜெ. ஜெயலலிதா** அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டு அதை செயல்முறை படுத்த திட்டங்கள் வகுத்து வருகிறார்கள்.

அதன் அடிப்படையில் அவ்வப்பகுதிகளிலுள்ள ஊர் பொது மக்களும் உபயதாரர்களும் தாமாக முன்வந்து ரூ. 25 000 நன்கொடையாக செலுத்தினால் அத்தொகையை வைத்து ஒரு வைப்பு நிதி ஏற்படுத்தி அதிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு ஒரு கால பூஜை நடத்த பயன்படுத்தப்படும். இவ்வாறு ரூ. 25 000 நன்கொடை கொடுக்க முடியாத சூழ்நிலையில் ரூ. 12 500 நன்கொடையாக செலுத்தினால் அரசின் பங்காக முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ. 12 500 வழங்கி ஆக மொத்தம் ரூ. 25 000 வைப்பு நிதியாக ஏற்படுத்தி அதிலிருந்து கிடைக்கும் வட்டியை ஒருகால பூஜை தொடர்ந்து நடைபெற பயன்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்.

அதன் அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கீழ்க்கண்ட 10 திருக்கோவில்கள் ஒவ்வொன்றிற்கும் தலா ரூ. 12 500 வீதம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திருக்கோவில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ. மொத்தம் 1·25 000 வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

1. சீனிவாசப் பெருமாள் மற்றும் காசி விஸ்வநாதர் திருக்கோயில் கல்யாணபுரம் திருவையாறு வட்டம்.

2. சீனிவாசப் பெருமாள் மற்றும் விநாயகர் திருக்கோயில், புதூர், பாபநாசம் வட்டம்.

3. கோதண்டராமசாமி திருக்கோவில் முடிகொண்டான், நன்னிலம் வட்டம்.

4. வரதராஜப் பெருமாள் திருக்கோவில் இடையாத்தான்குடி, நன்னிலம் வட்டம்.

5. சாமுண்டீஸ்வரி திருக்கோயில், இடையாத்தான் குடி, நன்னிலம் வட்டம்.

6. காசி விஸ்வநாதர் பாலதண்டாயுதபாணி திருக்கோவில், ஆப்பக்கூடல், பவானி வட்டம்.

7. ஆதிநாராயணப் பெருமாள் திருக்கோவில், ஆதனூர், பெருந்துறை வட்டம்

8. ஆதீஸ்வரர் திருக்கோவில், ஆதனூர் பெருந்துறை வட்டம்.

9. பிள்ளையார் ஆஞ்சநேயர் தர்மராஜர் வகையறா திருக்கோவில், மேல்கரிப்பூர் செங்கம் வட்டம்.

10. மாணிக்க விநாயகர் திருக்கோவில் வடமாத்தூர், செங்கம் வட்டம்.

மேற்கண்ட திருக்கோவில்களும் அதனுடைய பங்காக ரூ 12500-ஐ நன்கொடையாக அளித்துள்ளன. ஆக மொத்தம் ரூபாய் 25 000-ஐ கொண்டு மேற்கண்ட ஒவ்வொரு திருக்கோவில்களும் ஒரு கால பூஜையினை சிறப்பாக நடத்தும்

# 'இல்லையே என்னாத இயற்பகைக் கடியேன

பேராசிரியை திருமதி சுமதி குமாரசுவாமி
மருத்துவக் கல்வித் துணை இயக்குநர், (செவிலியல்), எழிலகம், சென்னை - 600 005.

''இயற்பகை முனிவா ஓலம்; ஈண்டு நீ வருவாய் ஓலம்
அயர்ப்பிலா தானே ஓலம்; அன்பனே ஓலம்; ஓலம்
செயற்கருஞ் செய்கை செய்த தீரனே ஓலம் என்றான்
மயக்கறு மறைஓ லிட்டு மாலயன் தேட நின்றான்.''

திருத்தொண்டர்புராணம்
—பாடல்29

அயர்ப்பிலாதவனாக, அன்பனாக, செயற்கருஞ்செய்கை செய்த தீரனாக, சிறப்பிக்கப்பட்டவர்,இயற்பகை நாயனார். யாரால் என்றால் மாலயன் தேட ,மறைதேட நின்ற இறைவனான சிவபெருமானால். அவ்வளவு பெருமைபெற்ற இயற்பகை நாயனார் புராணத்தை சேக்கிழார் சுவாமிகள் திருத்தொண்டர் புராணத்தில் மூன்றாவதாக வைத்து, அழகாக நயம்பட , அனைவரும் வியப்புறும் வகையில் பாடியுள்ளார். அச்கதையினை இங்கு நாம் படித்து மகிழ்வோம்.

சோழ மண்டலத்தில் காவேரி பூம்பட்டினமான, விசேடதலத்தில் வைசிய குலத்திலே ''வேண்டும்யாவையும் இல்லை எண்ணாது கொடுக்கும் இயல்பின் நின்ற உலகியற் பகையார் என்பவர் ஒருவர் இருந்தார்.''

அவர் இல்லறத்தில் இருந்த வண்ணம் ''நீறுசேர் திருமேனியர் மனத்து நினைத்த யாவையும்வினைப்பட முடிந்து மாறிலாத,நன்னெறியினில் விளங்கும் மனையறம்புரி மகிழ்ச்சியின் வந்தவாறெலாம் அவர் ஏவின செய்யும் பெருமையே எனப் பேணி வாழ்ந்தார்''.

கருணாநிதியான இறைவன் இயற்பகைநாயனாரின் சிவபக்தியைஉலகத்தோருக்கு உணர்த்த எண்ணி ஒரு நாள் ஒரு மறையவர் வடிவங்கொண்டு இயற்பகை நாயனாரின் இல்லத்தை அடைந்தார். இயற்பகை நாயனார் மனம் மகிழ்வுடன் மறையவர் வடிவுடன் வந்த இறைவனை எதிர்கொண்டு, சிறப்பின்மிக்க அர்ச்சனைகள் முன்செய்து,

''முந்தை எம்பெருந்தவனாவென்கோ?
முனிவஃ இங்கெழுந்தருளிய'' தென்றார்.''

அதுகேட்ட வேதியர் இயற்பகை நாயனாரை நோக்கி ''சிவனடியார்கள் விரும்பிக் கேட்பன யாவையெனினும் நீர் அவைகளை மாறாமல் மகிழ்ச்சியோடு கொடுத்தலை நான் கேள்வியுற்று உம்மிடத்தில் ஒரு பொருளை விரும்பி நான் இங்குவந்தேன். அதனுக்கு இசையலாம் எனில் நான இயம்புகின்றேன் என்றார்.அதனை கேட்ட இயற்பகை நாயனார் கீழ்க்கண்டவாறு இயம்புகின்றார் என சேக்கிழார்பாடியுள்ளார்.

''என்ன அவ்வுரை கேட்டியற் பகையர் யாதும் ஒனறும் என். பக்கல் உண்டாகில்,அனன தெம்பிரான் அடியவர்உடைமை;ஐயம் இல்லை நீர் அருள் செய்யும்'' என்ன, ''மன்னு காதல் உன் மனைவியை வேண்டி வந்த தீங்'' கென அங்கணர்எதிரே,சொன்ன போதிலும் முன்னையின் மகிழ்ந்து தூய தொண்டனார்பொழுதுரை செய்வார்.

—பாடல்-7.

''இது எனக்கு முன்புள்ளதே வேண்டி எம்பிரான் செய்த பேறெனக்'' கென்னாக், கதுமெனச்சென்று தம்மனை வாழ்க்கைக் கற்டன் மேம்படு காதலி யாரை, ''விதிமணக்குல மடந்தை! இன்றுனை இம் மெய்த்தவர்க்கு நான்கொடுத்தனன்'' என்ன, மது மலர்க்குழல் மனைவியார் கலங்கு மனந் தெளிந்தபின் மற்றிது மொழிவார்.''

— பாடல்-8,

எப்படிப்பட்ட பொருளாயினும்என்னிடத்தில் இருக்குமாயின் அந்த பொருள் நமது கடவுளாகிய பரமசிவனுடை அடியார்க்குரிய பொருளேயாம். இதைக்குறித்து தேவரீர் சந்தேகிக்க வேண்டுவதில்லை. நீங்கள் விரும்பியதைச் சொல்லும்' என இயற்பகை நாயனார் கேட்க, இறைவனும், '' மன்னுகாதல் உன் மனைவியை வேண்டி வந்தேன்'' என நாயனாரும்'' என்னிடம் உள்ளதையே விரும்பி கேட்டுள்ளீர், அடியேனுடைய பாக்கியம் என்று சொல்லி, உள்ளே சென்று மனைவியிடம் ''நான் இன்று உன்னை இந்த சிவனடியாருக்கு கொடுத்து விட்டேன்'' என்றார். மது மலர்க் குழல் மனையார் கலங்கி மனம் தெளிந்தபின்'' கீழ்க்கண்டவாறு கணவரிடம் கூறுகின்றார்.

''இன்று நீரெனக் கருள் செய்த திதுவேல் என்னுயிர்க்கொரு நாத; நீர் உறைத்த,



தொன்டு நான்செயும் அத்தனையல்லால் உரிமை வேறுளதோ எனக்கு?'' என்று, தன் தனிப் பெருங் கணவரை வணங்கக் தாழ்ந்து தொண்டனார் தாமெதிர் வணங்கச்சென்று மாதவன் சேவடி பணிந்து திகைத்து நின்றனள் திருவினும் பெரியாள்.''

—பாடல் 9

எவராலும் சொல்ல முடியாத, செய்ய இயலாத காரியத்தை இயற்பகை அவர்தம் மனைவி யாரிடம் சொன்னார்! செய்தார்!. நாயனார் தம் மனைவியாரிடம் கூற அவரும் வேதியர்கூடச் செல்ல சம்மதித்தார். இதை படிக்கும் பொழுது நம் கண்களில் கண்ணீர் பெருகுகின்றது. சிவத் தொண்டில் கணவருக்கு, மனைவி சளைத்தவர் அன்று என்பதை அவ்வம்மையார் மெய்ப் பிக்கின்றார். நாயனார் மேலும் வேதியரை நோக்கி' நான் செய்ய வேண்டிய காரியம் யாது? என்றுவினவ, இந்தப்பெண்ணை நான் தனியாக கொண்டு போகுப்போது, உன் பந்துக்கள் மற்றும் உன்மேல் பற்றுள்ளவர்கள் எனக்கு இடையூறு விளைவிக்கலாம். ஆதனால், அவர் களைக் கடக்கும்வரை நீர் துணையாக வர வேண்டும்' என்று கூறினார். நாயனாரும், இவர் கட்டளை இடும்வரை காத்திருந்தேனே! அது என்குற்றம் என நினைத்து, பின் போர்க் கோலம் பூண்டு வாளையும், கேடயத்தையும் ஏந்திவேதியரையும்மனைவியையும்முன்போகச் சொல்லி, தாம் பின்சென்றார். அப்பொழுது இயற்பகை நாயனாருடைய சுற்றத்தார்கள் நாயனார். பகதிப் பைத்தியத்தினால் தமது மனைவியை வேதியருக்குக்கொடுத்தாலும், தம் குலப்பெண்ணை தங்கள் பேருக்கு பழிவரும் வகையில் வேறு ஒருவர் கொண்டு செல்வதை சகியாது, அவரது மனைவியை மீட்க எண்ணி ஆயுதங்களை எடுத்து வேதியரை இருபக்க மும் சூழ்ந்தனர்.

'துட்டனே, எங்கள் குலப் பெண்ணை விட்டுப்போ' என்று வளைத்தனர். அடியவர் பயந்ததுபோல் நாயனாரின் மனைவியைப் பார்க்க, நாயனார் தம் மனைவி 'சுவாமி! நீர் பயப்படவேண்டாம். நாயனார் அவர்களை வெல்வார் என்றார். இயற்பகையும், அவர் களை எதிர்த்து அவர்கள் சொல் கேளாமல் அவர்களோடு யுத்தம் செய்து. அவர்களைக் கொன்று, வேறு ஒருவரும் வரவில்லை என்று கண்டு யுத்தகளத்தில் உலாவினார். நாயனா ரின் இச்செயல், இயற்கைக்கு பகையானது, விலக்கானது. எப்படிப்பட்டவரும் அடியவர் களானாலும், அன்புடையவர் ஆனாலும் தன்னைக் கொடுப்பார், பொருளைக் கொடுப் பார். ஆனால் தன் மனைவியைப் பிறருடன் போக சம்மதியார். மகாபாரதத்தில் தருமன் சூதாடி, பாஞ்சாலியை பணயம்வைத்தார். பாஞ் சாலியை அடிமையாக கௌரவர்களிடம் விட வில்லை. பிறகு வனவாசத்திற்கு பாஞ்சாலியை ஐவரும் அழைத்துச் சென்றனர். ஆனால் இங்கோ நாயனார்சிவன்பால் சிவனடியார்பால் கொண்ட அளவற்ற காதலால் தான் என்ன செய்கின்றோம் என்ன கொடுக்கின்றோம் என்பதையே அறியமாட்டார். உடல் பொருள்

ஆவி அனைத்தும் இறைவனுக்கே சொந்தம், தான் விரும்பும் எதுவும் இறைவனுக்கே சொந்தம் என்ற கொள்கையைக் கொண்டவர். மகாபாரதத்தில் கண்ணன் கர்ணனிடம் புண்ணியம் அனைத்தையும் தாரை வார்த்து வாங்கி பிறகு கர்ணனுக்கு காட்சி தந்துவேண்டுவதைக் கேட்க எனச் சொன்னபொழுது,

''இல்லை என்று இரப்போருக்குஇல்லை
இதயம் நீ தா'' என்றார். [என்றுரையா

இயற்பகை நாயனார் சிவனடியார்கள் வேண்டியதை வேண்டியவாறே ஈந்தார். இயற்பகை நாயனார் கொடையில் மகாபாரதக் கர்ணனை விஞ்சியவர்.

சிவன் மறையவர் உருவில் வந்து இங்கு மனைவியைக் கேட்டு, பெற்று செல்ல கணவர் காவலனாகச் செல்கின்றார். இயற்பகை நாயனார். சிவனடியார்கள் பொருட்டு எதையும் துறக்க வல்லவர்

''மானாபி மானம் விட்டுத்தானாகி
நின்றவருக்குச்
சேனாதி பதிபோல—ஞானாதிபதியுண்டு''

—நந்தனார் சரித்திரம்

மனைவியைப்பிறருக்கு கொடுக்கின்றோம்என்ற மானாபிமானத்தை இயற்பகை நாயனார் நினைக்கவில்லை. நாயனார் அனைத்தையும் விட்டுவிட்டார். இறைவன் அவருக்குக் காட்சி தராமலா இருப்பார்? மேலும் என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்போம்.

நாயனார் வேதியரை நோக்கி ''சுவாமி அஞ்ச வேண்டாம் நான் இந்தக்காட்டை கடக்கும் வரைக்கும் காவலனாகவருகின்றேன்' என்று அவர்களோடு தொடர்ந்தார். திருச்சாய்க்காடு என்னும் சிவத்தலத்தின் அருகில் வந்தவுடன்,வேதியர் அவரை திரும்பப்போகச் சொன்னார். அவரும் வேதியரை வணங்கித் திரும்பினார். கொஞ்சதூரம்தான் இயற்பகை நாயனார் நடந்திருப்பார். அப்பொழுது வேதியர் 'இயற்பகையே வா'' என ஓலமிட்டார். அதைக் கீழ்க்கண்ட பாடல் நயம்பட உணர்த்துகிறது.

''இயற்பகை முனிவா ஓலம்! ஈண்டு நீ வருவாய்
ஓலம்
அயர்ப்பிலா தானே ஓலம்! அன்பனே ஓலம்!
ஓலம்!
செயற்கருஞ் செய்கை செய்த தீரனே ஓலம்
என்றார்
மயக்கறு மறைஓ லிட்டு மாலயன் தேட
நின்றான்.''

—பாடல் 29

நாயனார் திரும்பி ஓடிவந்தார். ''அடியேன் வந்தேன். இன்னும் இடையூறு செய்பவர்களைக் கொன்று வீழ்த்துவேன்'' எனக் கூறிக் கொண்டே ஓடிவந்தார். அப்பொழுது வேதியர் மறைந்தார். ஆகாயத்தில் இறைவன் இடப வாகனத்தில் அனைவரும் காண உமையோடு காட்சி அளித்தார். நாயனார் வணங்கினார். இறைவனும், 'என்மீது களங்கம் அற்று அன்பு வைத்த நீ, உன்மனைவியோடு நம்மோடு வா'' என்று சொல்லி மறைந்தார். நாயனாரும், அவர் மனைவியும் சிவலோகம் அடைந்தனர். நாயனாருடன் சண்டையிட்டு இறந்த சுற்றத்தார்களும் சிவலோகம் அடைந்தனர். சுந்தரமூர்த்தி சுவாமிகளும் 'இல்லை என்னாத இயற்பகைக்கு அடியேன்' என்று போற்றுகின்றார். ''அன்பு செய்வாரை அறிவன்சிவன்'' என்று திருமூலரும் கீழ்க்கண்டவாறு கூறுகின்றார்.

''இகழ்ந்ததும் பெற்றதும் ஈசன் அறியும்
உகந்தருள் செய்திடும் உத்தம நாதன்
கொழுந்தன்பு செய்தருள் கூரவல் லார்க்கு
மகிழ்ந்தன்பு செய்யு மருளதுவாமே''.

—திருமந்திரம் 280

''ஈசன் அறியும் இராப்பக லுந்தன்னைப்
பாசத்துள் வைத்துப் பரிவு செய்வார்களைத்
தேசுற் றறிந்து செயலற் றிருந்திடில்
ஈசன்வந் தெம்மிடை ஈட்டிநின் றானே''

—திருமந்திரம் 288


செயற்கரும் செய்கை செய்து, இறைவனால் புகழப்பட்டு இயற்பகை நாயனார் என வாழ்த்துப் பெற்ற நாயனார் சரித்திரம், உண்மையான அடியவர்கள் இறைவன்பால் வைக்கும் அன்புக்கு எல்லையும், அளவும் இல்லை அவர்கள், இறைவனுக்கும், அவர்தம் அடியவர்களுக்கும், அன்பின் காரணமாகவும், பக்தியின் காரணமாகவும் எதையும் துறக்க வல்லவர்கள் என்பதை உலகுக்கு உணர்த்துகின்றது.

## உபகாரம் செய்!

ஜீவராசிகளுக்குச் செய்கிற உபகாரத்தால் சகல பிராணிகளுக்கும் மாதா பிதாவாக இருக்கப்பட்ட பரமேசுவரனுக்கே பூஜை பண்ணியதாக ஆகிறது.

—ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரசுவதி சுவாமிகள்

# ஆடல் காணீரோ...!



கம்பன் கவிநயமணி

**வே. தியாகராஜன் [29]**

வங்கிய சேகரபாண்டியன் மதுரையை அரசாட்சி புரிந்த காலத்தில், ஒருநாள் பத்து அசுவமேத யாகங்கள் செய்த மகிழ்ச்சியில், பிரமதேவன் தன் மனைவியரான காயத்ரி, சாவித்திரி, சரசுவதி ஆகிய மூவருடன் காசியில் கங்கையில் நீராட வந்தான். யாரோ பாடிய இசையைக் கேட்டு மயங்கிய சரசுவதி பிரமித்துப் பின் தங்க, பிரமதேவன் கங்கையை அடைந்து, சரசுவதியின் வரவிற்காகச் சிறிது நேரம் தாமதித்து, மற்ற இரு மனைவியருடன் நீராடினார். அப்போது அங்கு வந்த சரசுவதி தன்னை விட்டு நீராடலாமா எனக் கோபிக்க, பிரமன், 'குற்றம் உன்னுடையதாயிருக்க நீ நம்மைக் கோபித்தாய். நீ அனேக தடவைகள் மனிதப்பிறவி எடுப்பாயாக' எனச் சபிக்க, நாமகள் வருந்துவது கண்டு மனமிரங்கிய நான்முகன் ''உனது வடிவான 51 எழுத்துக்கள் 'அ' என்பதிலிருந்து 'ஹ' வரையுள்ள 48 எழுத்துக்களான 48 புலவர்களாக வருக (வடமொழியில் 'அ' முதல் 'ஹ' வரை 15-ஆம், க,ச,ட,த,ப வர்க்கங்களில் 5 எழுத்துக்கள் வீதம் 25-ஆம், 'ய' முதல் 'ஹ' வரை 8 எழுத்துக்களும் ஆக 48) என்றார். 'நாற்பத்து ஒன்பதாவது புலவராகச் சிவபெருமானே தோன்றுவார்' என்று அருளிச் செய்தார்.

அவ்வாறு 48 புலவர்களாகத் தோன்றி தமிழிலே தனியாற்றலும் சிறப்பும் கொண்டு, சிவபக்தர்களாக, மதுரையை நோக்கி வந்த காலத்தில், சிவபெருமான் ஒரு புலவர் வேடம் கொண்டு எதிர்வந்து அவர்களை யாரென விசாரித்து, ''நீங்கள் எமது சோமசுந்தரப் பெருமானை வணங்க வேண்டும்' என அழைத்துச் சென்று மதுரையில், கோயிலில் விட்டு மறைந்து அருளினார். 'சிவபெருமானின் கருணையிது' என எண்ணிய புலவர்கள், மதுரை அரசனான பாண்டியனை அடைந்து அவனது ஆதரவு பெற்றனர். மதுரையில்முன்னாளிலிருந்தபுலவர்களும் வேற்றூர்களிலிருந்து வந்த புலவர்களும் இந்த 48பேரிடம் தோற்றனர். எனினும் நாற்பத்தெட்டுப் பேரும் சோமசுந்தரப் பெருமானிடம் சென்று 'தொடர்ச்சியாக எம்முடன் பலர் வாதம் புரிகின்றனர். புலமையை உள்ளபடி சீர் தூக்கியளக்கும் கருவியாக ஒரு பலகை வேண்டும்.'' எனக் கேட்டனர். பாணபத்திரன் கேட்காதபோது பலகை தந்த பெருமான், புலவர்கள் கேட்டபின் தராமலிருப்பாரோ? தானே ஒரு புலவர் வேடம் கொண்டு ஒரு பலகையுடன் தோன்றினார்.

''பாடிய பாணர்க் கன்றுவ்வியவே பலகை
யிட்டார்
பாடிய புலவர் வேண்டில் பலகை தந்தருளார்
கொலலோ?
பாடிய புலவராகும்படி யொரு படிவங்கொண்டு
பாடிய புலவர் காணத் தோன்றினார்
பலகையோடும்''

'இது உங்களுக்கெல்லாம் ஒவ்வொரு முழமாக வளர்ந்து இடம் கொடுக்கும்'' எனக் கூறினார். பலகையைப் பூசித்து கீரன், கபிலன் பரணன் முதலானவர்கள் ஏறினர். எல்லோருக்கும் இடமளித்து வளர்ந்தது அப்பலகை.

பின்னர் புலவர்கள் அழகான பாடல்களைப்பாடி, தமது பாடல்கள் எது எனத் தாமே தெரியாது மயங்கிய நிலையில் இறைவர் அவர்கள் எதிரில் தாமே புலவர் உருவத்துடன் தோன்றி அவரவர் பாடல்களை எடுத்தளித்தார். புலவர்களின்வேண்டுகோளுக்கு இணங்கி தானும் ஒரு புலவராக சங்கப்பலகையில் நடு நாயகமாக வீற்றிருந்தருளினார்.

'பொன்னின் பீடிகை என்னும் பொன்னாரமேல்
துன்னு நாவலர் சூழ் மணியாகவே
மன்னினார் நெடு நாயக மாமணி
என்ன வீற்றிருந்தார் மதுரேசரே.''

இது இவ்வாறாக மதுரையில் நந்தவனம் ஏற்படுத்தி, வண்டு தீண்டாத மலர்களை இறைவனுக்கு அர்ப்பணம் செய்து விளங்கிய சண்பக பாண்டியன் ஒரு நாள் நந்தவனத்தில் தன் மனைவியுடன் இருக்கும்போது, ஒரு அருமையான வாசனை வீசியது. 'இது மலரின் மணமல்ல, தெய்வீகமாயுள்ளது. காற்றிற்கோ வாசனை கிடையாது' என எண்ணி, மனைவி



யின் கூந்தலை முகர்ந்து பார்க்க. அங்கு ஒரு நன்மணம் கண்டான். ''இம் மணம் கூந்தலுக்கு இயற்கையோ செயற்கையோ' என ஐயமடைந்தான். 'என் கருத்தையறிந்து பாடல் செய்யக் கூடியவருக்கு ஆயிரம் பொன் தருவேன்' எனக் கூறி, ஒரு பொற்கிழியைக் காட்டினான். புலவர்கள் அனைவரும் அப் பொருளை அறியாது வருந்தி மயங்கினர்.

அப்போது தாய் தந்தையற்றவனான தருமி என்ற ஒரு பிராமண பிரமசாரியான ஆதிசைவன், திருமணம் செய்து கொள்ள வேணுமென்ற ஆர்வமுடையவனாக இறைவனது திருக்கோயிலையடைந்து 'பெருமானே! நான் வேத ஆகமங்களைக் குற்றமறக் கற்றபோதிலும் நின்னைப் பூசிப்பதற்கு இல்லற வாழ்க்கையுள்ளவனாக இருக்க வேணுமே! பாண்டியன் மனக் கருத்தை அறிந்து ஒருபாடல் கூறினால் பொருள் பெற்றுத்திருமணம் செய்து கொள்ளுவேன்' என வேண்டிக் கொண்டான். தமிழ்த் தெய்வமான சொக்கலிங்க மூர்த்தி

'கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழிய நட்பின் மயிலியல்
செறியெயிற்று அரிவைகூந்தலின்
நறியவும் உளதோ நீயறியும் பூவே''
(''பெண்களின் கூந்தலுக்கு இயற்கையான
நறுமணம் உண்டு, கூந்தலைப் பார்க்கிலும்
நறுமணம் பொருந்திய மலர் பறவும் உளவோ''
என்க. தனிப்பாடல் திரட்டு)

என்ற பாடலை எழுதியளிக்க, இதை எடுத்துச் சென்று தமிழ்ச் சங்கத்தாரிடம் காட்டியபோது அவர்கள் ஒப்புக் கொண்டனர். கிழியை எடுத்துக் கொள்ள தருமி நெருங்கிய போது 'பாட்டில் குற்றம் உள்ளது. கிழியை அறுக்காதே' என்றான் கீரன். திடுக்கிட்ட தருமி இறைவனிடம் சென்று 'இறைவனே! கதியில்லாத எனக்கு குற்றமுள்ள பாட்டை அளிப்பாயா? எனக்குப் பணம் வேண்டாம். திருமணமும் வேண்டாம். உலக நாயகனான உன கவிக்கு அற்பமான மனிதன் குற்றங் கூறி விட்டான். உன் திருவருள் இதுதானோ?' எனக் கண்ணீர்விட, இறைவன் ஒரு புலவர் வேடத்தில் சபைக்கு வந்து 'நம் கவிக்கு குற்றம் கூறியவர் யார்?'' என்று கேட்க, கீரன் 'நான் தான் கூறினேன்' என்ன 'ஓஹோ! உடம்பை வளர்ப்பதற்காக அரிவாளில் நெய் தடவி, காலிரண்டையும் பரப்பிச் சங்கை அரியும் கீரனா என் கவியைக் குறை சொன்னாய்''?

'அங்கம் வளர்க்க அரிவாளின் நெய் தடவிப்
பங்கங் பட இரு கால் பரப்பிச்-சங்கதனைக்
கீர்கீரென்றறுக்கும் கீரனோ என் கவியைப்
பாரிற் பழுதென்பவன்''
என்று பாடினார்.

அது கேட்ட கீரன் அஞ்சாது 'சங்கையறுப்பது எங்கள் குலம், உமக்கு ஏது குலம்? சங்கையறுத்தாவது வாழ்வோம், அரனாரைப் போல் பிச்சை எடுக்க மாட்டோம்' என்றான்.

'சங்கறுப்பது எங்கள் குலம் சங்கரனார்க்கு
ஏதுகுலம்
பங்கமுறச் சொன்னால் பழுதாமோ-சங்கை
அரிந்துண்டு வாழ்வோம் அரனே! நின்போல்
இரந்துண்டு வாழ்வதிலை.''

இறைவன்: இருக்கட்டும்! நமது கவியில் என்ன குற்றம் கண்டீர்!

நக்கீரன்: சொற் குற்றமில்லை! பொருட் குற்றம் தான்!

இறைவன் : அது என்ன?

நக்கீரன்: மலர்களின் சேர்க்கையால்தான் கூந்தலுக்கு மணமே தவிர, கூந்தலுக்கு இயற்கையில் மணம் கிடையாது.

இறைவன்: பதுமினி என்ற உயர்ந்த சாதிப் பெண்ணின் கூந்தல்?

நக்கீரன் : அதுவும் அவ்வாறே!

இறைவன் : தேவலோகத்திலுள்ள பெண்களின் கூந்தல்?

நக்கீரன் : அது தேவலோகத்திலுள்ள மந்தாரமெனும் மரத்தின் மலரைச் சூடியதால் தான்.

இறைவன்: நீ அனுதினமும் வணங்கும் சிவபெருமானின் தேவியாம் ஞானப் பூங்கோதை அம்மனின் கூந்தல்?

நக்கீரன் : அதுவும் அப்படித்தான்!

நக்கீரன் தான் கூறியதைச் சாதிக்க இறைவன் தனது நெற்றிக் கண்ணைச் சிறிது திறந்து காட்ட 'தேவேந்திரன் போல் உடம்பு பூராவும் கண்ணாகக் காட்டினாலும் நீர் கூறியகுற்றம் குற்றந்தான்!'' என்றான அஞ்சாத நக்கீரன்.

''உம்பரார் பதிபோல் ஆகும்
முற்றுநீர் கண்ணானாலும் மொழிந்த
நும்பாடல் குற்றம்
குற்றமே என்றான் தன்பாலாகிய
குற்றந்தேரான்.''

இதையே தனிப் பாடலில் 'நெற்றிக்கண்காட்டி என்னை நீற்றிடினும் உம் குற்றம் குற்றமே'' என்றும் ''சாற்றிய செய்யுள் குற்றம் சடை கொண்டு வெருட்டல் வேண்டா'' எனக் காளத்தி புராணத்திலும் கூறப்படுகிறது. சிவ பெருமானின் நெற்றிக் கண்ணின் தாபம் தாங்காது பொற்றாமரைக் குளத்தில் விழுந்தான் கீரன். மற்ற புலவர்கள் இது கண்டு சிவபெருமானை வணங்கி வேண்டினர். கீரனது குற்றத்தைப் பொறுக்குமாறு வேண்டினர். மீனாட்சி அம்மையுடன் அவ்விடத்தில் தோன்றிய இறைவன், அனல் கண்ணை மூடி, அருட் கண்ணைத் திறக்க, நக்கீரன் கர்வம் நீங்கியவனாக, பொற்றாமரையில் இருந்து வெளிவந்தான.

உலக மாதாவான ஞானப் பூங்கோதையம்மனின் கூந்தலைக் குற்றம் சொன்ன நாவினையார் பொறுப்பார்? என எண்ணி, காளத்தி மலைமீது அம்மை ஞானப்பூங்கோதையாக வீற்றிருப்பதால் கைலைபாதி-காளத்திபாதி என நூறு பாடல்கள் பாடினான். கைலைப் பற்றி ஒரு பாடலும் காளத்திப்பற்றி ஒரு பாடலும் மாறி மாறி வரும் நூல் இது. 'தவறு பெரிதுடைத்தே'' எனத் தொடங்கும் கோபப் பிரசாதம் என்னும் நூலையும் பெருந் தேவ பாணி, திருஎழுகூற்றிருக்கை என்பனவற்றையும் பாடினான். திரு எழுகூற்றிருக்கை என்பது ஒன்று முதல் ஏழுவரை எண்களை அமைத்துப் பாடப் பெறும், ஒரு பாவினம். நக்கீரர், ஞான சம்பந்தர், திருமங்கையாழ்வார், அருணகிரி நாதர் போன்ற வெகு சிலரே திரு எழு கூற்றிருக்கை பாடியுள்ளனர்.

சோமசுந்தரப் பெருமான் தன்னை நோக்கி வணங்கிட் பாடிய கீரனை மன்னித்து ''நீமுன் போல் புலவர் குழுவில் விளங்குவாயாக!'' எனக் கூறினார். தருமிக்குப் பொற்கிழியளித்தார்.

கயிலைபாதி காளத்தி பாதி, பெருந்தேவ பாணி, கோபப் பிரசாதம், திருஎழு கூற்றிருக்கை ஆகியவை சைவத்திருமுறையில் பதினொன்றாம் திருமுறையில் சேர்க்கப் பெற்று, பாராயணம் செய்யக் கூடியவருக்கு இன்றும் நன்மைகளை அளித்து வருகின்றன.

நக்கீரன் நல்லறிவு பெற்று சிவபக்தி மேலிட்டு ''சிவபெருமானின் நெற்றிக் கண்ணால் எரிக்கப்பட்டவர்களை பிரமவிஷ்ணுக்களால்கூட காப்பாற்ற முடியவில்லை. இந்தப் பொற்றாமரை என்னைக் காப்பாற்றியது'' என எண்ணித் தினமும் அதில் நீராடிச் சிவபெருமானை வணங்கினான். இந்நிலையில் ''கீரன் இலக்கணமே அறியாது பாடல்களைப் பாடுகிறான். யாரைக் கொண்டு இவனுக்கு இலக்கணம் போதிப்பது'' என யோசித்தார் சிவபெருமான்.

அதை அறிந்த மீனாட்சியம்மையார் ஒரு சமயம் கைலை மலையிலே தேவர்கள் அனைவரும் கூடினர். பூமி ஒரு புறம் உயர்ந்து மற்றொருபுறம் தாழ்ந்தது. அது கண்டு நம்மை நிகர்த்த ஒரு தம்பதிகள் தென்னாட்டில் இருந்தால் பூமி சமமாகும் என எண்ணி அகத்தியரையும் லோபா முத்திரை எனற அவர் மனைவியையும் அனுப்பினீர்கள். அகஸ்தியர், 'நான் செல்லுமிடம் தமிழ்நாடு என்பர். யாவரும் தமிழாராய்ச்சி செய்தவர். அவர்களுக்கு நான், ஏதாவது கேள்வி கேட்டால், பதில் கூறவேண்டும், எனக்குத் தமிழைப் போதியுங்கள்' என்றார். அவருக்குப் போதித்தீர்கள். அம்முனிவர் பொதிய மலையில் உள்ளார். அவரையே கீரனுக்கு இலக்கணம் போதிக்கச் செய்யலாம்.''

''விடைகொடுபோவான் ஒன்றை வேண்டினான்
ஏகும்தேயம்
தொடைபெறு தமிழ் நாடென்று சொல்லும்;
அந்தநாட்டின்
இடையயில் மனிதரெல்லாம் இன்றமிழாய்ந்து
கேள்வி
உடையவர் என்பார்; கேட்டார்க்கு உத்தரம்
உரைத்தல் வேண்டும் ''

தென்னாடு என்றைக்கும் அறிவில் சிறந்த தாயிருந்தது என மேற்படி பாட்டுகாட்டுகிறது. இறைவன் இதனைக் கேட்டு அகத்தியரை நினைக்க, அவர் தனது மனைவியுடன் தோன்றினார். மீனாட்சி சுந்தரர்களை வணங்கினார். இறைவன கீரனுக்கு இலக்கணம் உபதேசிக்குமாறு கட்டளையிட 'அவ்வாறே செய்து, அகஸ்தியர் தனது இருப்பிடம் சேர்ந்தார். அம்மை 'கீரனுக்கு இலக்கணம் தாங்களே போதிக்காமல் பிறரைக் கொண்டு போதித்த காரணம் யாதோ?'' எனக் கேட்க இறைவன் 'தன்னைத் தினம் வழிபடுவோர், குருதட்சிணை நிறைய அளிப்போர், பொறாமையில்லாதவர் சொன்ன சொல் தவறாதவர்களுக்குத் தான் உபதேசிக்கலாம். இவன் என்மீது பொறாமை கொண்டிருந்தவன் ஆதலில், பிறரைக் கொண்டு உபதேசித்தேன்' எனறார்.

'தன்னை நித்தலும் வழிபடும் தகுதியோர்;
சாலப்
பொன்னளிப்பவர்; தொடுத்தமற் சரமில்லாப்
புனிதர்;
சொன்ன சொற் கடவாதவர்; துகள் தவிர்
நெஞ்சத்து
இன்னவர்க்கு நூல் கொளுத்துவது அறன் என
இசைப்ப''

இலக்கணம் கற்றகீரன் தனது பாடல்களிலேயே குற்றங்கள் இருப்பது கண்டு வருந்தி, இவ்வளவு தவறு செய்த நாம் சிவபெருமானது கவியில் குற்றங்கண்டோமே என வெட்கமடைந்தான். கபிலன், பரணன் முதலானோர் கீரனிடம் இலக்கணம் தெளிந்து தமது பாடல்களையும் அமைத்து அழகுபடப் பாடினர்.

அவ்வாறு பாடிய புலவர்கள் தருக்குற்றுத் தத்தம் பாடல்கள் தாம் அழகாக அமைந்திருப்பதாகக் கூறிப்பிணங்கினர். 'சோமசுந்தர பெருமானையடைந்து' எங்களது பாடல்களை சீர்தூக்கி ஆராய்ந்து எமக்குள் ஏற்பட்டுள்ள பிணக்கைத் தீர்க்க வேண்டும்'' என வேண்டினர். சிவபெருமான அவர்கள் எதிரில் ஒரு புலவராகத் தோன்றி ''இந்நகரில் தனபதி என்றொரு வணிகன் உண்டு. அவன் மனைவி பெயர் குணசாலினி, அவர்களுக்கு ருத்ரசர்மன் என்ற ஊமையான மகன் உண்டு. அவன் நல்ல பாடல்களைக் கேட்டு மகிழ்ச்சி தெரிவித்து ஆனந்தக் கண்ணீர் விடுவான்.'' எனக் கூற புலவர்கள் வணிகர் குல மணியான அக்குழந்தையை ஆசனத்திலிருத்தித் தமது பாடல்களைப் பாடிக் காட்டினர்.

''மகிழ்ந்தான் சிலர் சொல்லாட்சியை;
மகிழ்ந்தான சிலர்பொருளை
மகிழ்ந்தான் சிலர் சொல்வைப்பினை;
இகழ்ந்தான் சிலர் பொருளை
புகழ்ந்தான் சிலர் சொல்லின்பமும்
பொருளின்பமும் ஒருங்கே
இகழ்ந்தான் சிலர் சொற்றின்மையும்
பொருட்டிண்மையும் தேர்ந்தே''

நக்கீரன், கபிலன், பரணன் ஆகிய மூவரின் பாட்டை அக்குழந்தை மிக அழகானவை என ஒப்புக் கொண்டான். அவைகள் உலகில் பெருமையடைந்தன.

மதுரையைக் குலசேகர பாண்டியன் என்பான் ஆண்டு வந்தான். அவன் தமிழில் நல்ல தேர்ச்சியுடையவன். ஆதலால் சங்கப்பலகை கூட அவனுக்கு இடமளித்தது. கபிலனிடம் தமிழ்க் கற்ற இடைக்காட்டுப் புலவன் என்பான் பாண்டியன் தமிழார்வம் அதிகம் உடையவன் என்பதை அறிந்து, அழகிய பாடல்கள் செய்து அவற்றைப் பாண்டியன் எதிரில் பாடிக் காட்டினான். பாண்டியன் அவைகளைக் கேட்டுப் பாராட்டாமல் பொறாமையால், மகிழ்ச்சியைக் காட்டாமலிருந்தான். இது கண்டு வருந்திய இடைக்காட்டுப் புலவன் கோயிலையடைந்து சிவபெருமானை வணங்கித் தன் குறையை முறையிட்டான்

''சந்நிதியில் விழுந்தெழுந்து தமிழறியும்
பெருமானே! தனனைச் சேர்ந்தோர்
நந்நிதியே! திருவாலவாயுடைய நாயகனே!
நகுதார் வேம்பன்
பொன்நிதிபோல் அளவிறந்த கல்வியும்
மிக்குளனென்று புகலக்கேட்டு
சொந்நிறையும் கவிகொடுத்தேன்
அவமதித்தான் சிறிதும் முடிதுளக்கானாகி''

''உடல், மலை, உப்பங்கழி, மரம், மலர் இவைகளைப் புலவர்கள்எவ்வளவோ புகழ்கிறார்கள். அவைகள் எப்படி மௌனமாக இருக்கின்றனவோ அம்மாதிரி இருந்தான் பாண்டியன், என்னை அவன் இகழவில்லை. சொல்லான் உன் தேவியையும் பொருளான் உன்னையுமே இகழ்ந்தான்' என முறையிட்டான். இதைக் கேட்ட இறைவன் மீனாட்சியம்மையுடன் தனது திருக்கோயிலுக்குத் தெற்கே, வைகையாற்றங் கரைக்கு வடக்கே ஒரு புதிய கோயில் உண்டாக்கி அமர்ந்தார். அதுதான் தற்காலம் பழைய சொக்கநாதர் கோயில் என அழைக்கப்படுகிறது.

மறுநாட் காலையில் திருப்பள்ளி எழுச்சி வந்த அடியார்கள் இறைவனது திருவுருவைக் காணாது வருந்திப் பாண்டியனிடம் கூற, பாண்டியன் சிம்மாதனத்திலிருந்து விழுந்து நடுக்கத்துடன் 'பெருமானே! பெருமானே!' எனக் கதறினான்.

'வழுதிஅரி அணையிலிருந்து அடியற வீழ்
பழுமரம் போல் மண்மேல் யாக்கை

பழுதுற வீழ்ந்து உயிரொடுங்க அறிவொடுங்கி
மட்பாவை படிந்து ஆங்கு ஒல்லைப்

பொழுது கிடந்து அறிவு சிறிது இயங்க எழுந்து
அஞ்சலிக் கைப் போது கூப்பி

அழுது இருகணீர் வெள்ளத்து ஆழ்ந்து
அடியேன் என் பிழைத்தேன் அண்ணால்
அண்ணால்''

# தமிழ்நாட்டிலும் தேவஸ்தானப் பல்கலைக் கழகம்

## திருமிகு நடேசன் பால்ராஜ் அவர்கள்

### மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர்

தமிழ்நாட்டில் இருக்கும் கோவில்களில் உள்ள சொத்துக்கள் மூலம் ஆண்டுக்கு 750 கோடி ரூபாய் வரவேண்டும். ஆனால் அந்த தொகை அரசுக்கு வராமல் உள்ளது.

குறிப்பாக சென்னையில் உள்ள ஒரு கோவிலுக்கு 360 ஏக்கரில் சொத்துக்கள் உள்ளன. அதற்கு மாத வாடகையாக 15 லட்சம் ரூபாய் கிடைக்க வேண்டும். ஆனால் அந்த சொத்துக்கள் மூலம் 2 ரூபாய்தான் வருமானம் வருகிறது.

எனவே கோவில் சொத்துக்களை மீட்டு முறைப்படுத்தி அதில் கிடைக்கும் வருமானம் முழுமையாக அரசுக்கு கிடைக்க புரட்சித் தலைவி அனுமதியுடன் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

கோவில் சொத்துக்களை மீட்பதற்கு தேவைப்பட்டால் அரசியல் சட்டத்தைத் திருத்தி கோவில் வருமானம் அரசுக்கு கிடைக்கும் வகையில் உரிய நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

திருப்பதி கோவில் வருமானத்தைக் கொண்டு திருப்பதி தேவஸ்தானம் ''ஸ்ரீவெங்கடேசுவரா பல்கலைக் கழகத்'தை அமைத்துள்ளது. அதில் கோவில்கள் மூலம் செயல்படும் கல்லூரிகள் இணைக்கப்பட்டுள்ளன.

அதேபோல் தமிழ்நாட்டிலும் தேவஸ்தானம் மூலம் ஒரு பல்கலைக் கழகம் அமைக்கப்படும்...மேலும் தேவஸ்தானம் மூலம் மருத்துவ கல்லூரியும் என்ஜினீயரிங் கல்லூரியும் ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள கோவில்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு நியாயமான ஊதியம் கிடைக்க தக்க ஏற்பாடு செய்யப்படும்.

தமிழ்நாட்டில் மொத்தம் எத்தனை கோவில்கள் உள்ளன? அவற்றில் ஒரு வேளை கூட தீபம் ஏற்ற முடியாத நிலையில் உள்ள கோவில்கள் எத்தனை? என்பது போன்ற விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகிறது.

ஒரு நேரம் கூட தீபம் ஏற்ற முடியாத அனைத்துக் கோவில்களிலும் அடுத்த ஆண்டுக்குள் தீபம் ஏற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழகக் கோவில்களில் பிரசாதமாக வழங்கப்படும் குங்குமம் மஞ்சள் போன்றவை தரம் குறைந்ததாக இருப்பதால் அவற்றை அணிந்து கொள்கிறவர்கள் பாதிக்கப்படுவதாக பல இடங்களில் இருந்து புகார்கள் வருகின்றன.

இதை தவிர்ப்பதற்காக சாஸ்திரப்படி அறநிலையமே குங்குமம் மற்றும் மஞ்சள் ஆகியவற்றை தயாரிக்க ஏற்பாடு செய்யப்படும்.

தமிழகத்தில் வேதாகம கல்லூரி அமைப்பதாக ஏற்கெனவே அரசு அறிவித்துள்ளது. அந்த கல்லூரி திருச்சி மாவட்டத்தில் அமைக்கப்படலாம்.

---

''பெருமானே! மேருமலையை அடைந்திரா? பழைய சிவபுரத்தையா? கைலாயத்தையா? தங்களை மறந்து உன்னை நினைக்கக் கூடியவர் மனத்தினையா? வேதத்தின் உச்சியையா? எங்கு சென்றீர்?'' எனறு தளர்ந்து கதறினார்.

அப்போது சிலர் வந்து 'மன்னா! ஒரு அதிசயம் மதுரைக்கு வடக்கே வைகை ஆற்றங்கரைக்குத் தெற்கே ஒரு புதிய கோயிலில் ஆலவாய் அப்பன் எழுந்தருளியுள்ளார்'' என்றனர். பாண்டியன் உடனே அவ்விடம் வந்து 'பெருமானே'! அம்மையோடு இங்கு வந்து இருப்பானேன்? என்ன குற்றம் நிகழ்ந்தது? அடியேனோ அல்லது என் உற்றார் உறவினர் எவராவது குற்றமிழைத்தனரா? எனது பகைவராலோ, கள்வராலோ, கொடிய மிருகங்களாலோ குற்றம் நேர்ந்ததா? பிராமணர் ஒழுக்கம் குறைந்தனரா? தான தருமம் சுருங்கி விட்டதா? இல்லறம் துறவறம் கேட்டு மாறி விட்டனவா? என்று கேட்டுக் கதறி,

''பாத மலரினை போற்றி! பன்னிரண்டு
கையானைப் பயந்தாய் போற்றி!
வேதமுடிகடந்த பரஞானத்தில் ஆனந்த
விளைவே போற்றி!
போதவடிவாய் நால்வர்க்கு அதை விதந்து
நிறைந்த பரம் பொருளே போற்றி!
மாதவள நீறணிந்த மன்னா! அங்கயற்கண்ணி
மணாளா போற்றி!''

என வணங்கிய காலத்து 'பாண்டிய உன் தோத்திரம் கேட்டு மகிழ்ந்தோம். நீ ஒரு சிறிய குற்றம் செய்தாய், என் அன்பனான இடைக் காடன் செய்யுளை இகழ்ந்தாய். அவன் மீதுள்ள அன்பினால் இங்கு வந்தோம்.'' என இறைவன் கூறினார். ''பெருமானே! யான் செய்த குற்றத்தைப் பொறுத்தருள வேணும்'' என வேண்ட, இறைவன் மீண்டும் தன் கோயிலுக்குத் திரும்பினார்.


பின்னர் பாண்டியன் இடைக் காடனுடைய செய்யுளைத் தக்க மரியாதையுடன் கேட்டு மகிழ்ந்தான். புலவர்களிடம் மன்னிப்பு கேட்டான். புலவர்களும் மன்னித்தனர். தமிழ் தழைத்தது.

---

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் தெ. அமிர்தலிங்கம், M.A., Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002



புரசைவாக்கம் அருள்மிகு சீனிவாச பெருமாள் ஆலயத்தில் கண்ணாடி அறை திறப்புவிழா சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திருமிகு கா. ப. பட்டாபிராமன், பி.ஏ. பி.எல்., அவர்கள் கண்ணாடி அறையைத் திறந்து வைத்துச் சிறப்பித்தார்கள். துணை ஆணையாளர் திரு தி. ஜெயராமன், பி.ஏ., பி.எல்., அறங்காவலர் குழுத் தலைவர் சீனிவாசன் ஆகியோர் உடன் உள்ளனர்.



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் பதவிப் பிரமாணம் செய்து வைக்க, மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சராக திருமிகு நடேசன்பால்ராஜ் அவர்கள் பதவி பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.